பக்கங்கள்:08

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 07 வியாழக்கிழமை 20.04.2023 கதிர்161

## இனி இது ரகசியம் அல்ல!

இந்தியாவிற்கு நெருக்கமானவர்களாகக் காட்டிக்கொள்வதாலும், வடக்கு கிழக்கு இந்தியாவிற்கு விசுவாசமாக இருப்பதாகக் காட்டிக்கொள்வதாலும் அதன் ஆதரவைப் பெற்றுவிட முடியும் என்கிற நினைப்பும், அதன் மூலம் தீர்வை அடைந்துவிட முடியும் என்கிறஎண்ணமும்தமிழ்த்தலைவர்களுக்கு உண்டு. பலதசாப்தங்களாகவெற்றியளிக்காத உத்தியாக இருந்தபோதும் அவர்கள் தங்கள் அரசியல் இருப்புக் கருதி இந்த உத்தியைத் தொடர்கின்றார்கள். அண்மைக் காலமாக சீனாவை எதிர்ப்பதன் மூலம் அதுவும் வடக்கு கிழக்கில் சீனாவை எதிர்ப்பதன் மூலம் இந்திய விசுவாசத்தைப் பறைசாற்றும் உத்தியையும் அவர்கள் கடைப்பிடிக்கிறார்கள்.

அதன் வெளிப்பாடாக அண்மையில் புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், வடக்கு கிழக்கில் சீனா காலூன்றுவதற்கு இடமளிக்கமாட்டோம்என்றுவீரவசனம் பேசியிருந்தார். அப்படிச் சீனா ☞ 2

## தந்தை படுகொலை: தாய் காயம் வளர்ப்பு மகன் பொலிஸால் கைது

### மயில்வாகனபுரத்தில் புதன் அதிகாலை சம்பவம்

ந.லோகதயாளன்.
யாழ்ப்பாணம், ஏப்.19

கிளிநொச்சிதருமபுரம்பொலீஸ் பிரிவுக்குட்பட்ட மயில்வாகனபுரம் பகுதியில்புதன்கிழமை அதிகாலை 4மணிஅளவில்மதுபோதையில் மகன் தகறாறில் ஈடுபட்டுத் தனது தந்தையை தாக்கி தள்ளி வீழ்த்தியதில் தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவர்களின் சண்டையை விலக்குப் பிடிக்கச் சென்ற தாயராரும் காயமடைந்தார்.

மயில்வாகனபுரத்தைச் சேர்ந்த பிச்சைமுத்து இராமசாமி 67 வயது என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர்களது வீட்டில் நின்ற தென்னையில் இருந்து ஒரு தொகுதி தேங்காய் பிடுங்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன. அந்தப் பணத்தை கைத் தொலைபேசி வாங்கத் தருமாறுகோரி கேட்டு மகன் சண்டை பிடித்துள்ளார். அதற்கு பெற்றோர் மறுத்த சமயமே பெற்றோரை தாக்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


கொலச் சந்தேகநபரான இராமசாமி ராமேஸ்வரன் (வயது 25) இராமசாமி தம்பதியனரால் எடுத்துவளர்க்கப்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கைதடி விபத்தில் நேற்றிரவு பொலிஸ் அதிகாரி இறப்பு

ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் கைதடிப் பகுதியில் புதன்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் அதிகாரி உயிரிழந்துள்ளார்.

ஏ-9 வீதியில் இரவு 9.30 மணியளவில் இந்த வவிபத்து இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் 56 வயதையுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டதோடு, அவரது உடல் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



பொலிஸ் அதிகாரி பயணித்த மோட்டார் சைக்கிளும் மற்றொரு வாகனமும் ஒன்றுடன் மோதியதில் விபத்துஏற்பட்டதாகமுதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கடன் மறு சீரமைப்பு கடும் சவால் மிக்கது

### நாடாளுமன்ற உறுப்பினர் காலநிதி ஹர்ஷ தெரிவிப்பு

கடன்மறுசீரமைப்பு கடும் சவாலானது. அதனை அடுத்து வரும் மாதங்களுக்குள் செய்து முடிக்கவேண்டும்என்றுஐக்கியமக்கள்சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காலநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்

ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அங்கு அவர் தெரிவித்ததாவது:

கடன் மறுசீரமைப்புக் கான தனது திட்டத்தினை மார்ச் 30 அரசு சமர்ப்பித் திருந்தது. சர்வதேச கடன் களை மறுசீரமைப்பதற்கு முன்னதாக உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதற்கு எதிர்பார்ப்பதாக அந்தத் திட்டக் கால அட்டவனையில் இருந்தது.

ஜூலை, ஆகஸ்ட், செப் டெம்பர் மாதங்களிலேயே வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதற்கு எதிர்பார்த்திருந்தது. ஆனால் தற்போது அனைத்தும் ☞ 2

## 2 விடயங்களில் மாற்றம் தேவை

இலங்கை முதலீட்டாளர்களை விரைவாகக் கவர விரும்பினால் இரண்டு விடயங்களில் மாற்றங்களைச் செய்யவேண்டும் என்றுமுன்னாள்சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

சர்வதேச முதலீட்டாளர்களை ஈர்க்கும்வகையில் இலங்கையின் நிர் வாகக் கட்டமைப்பு எளிமையாக்கப்படவேண்டும். அத்தோடு முதலீட்டாளர்கள்வெளிநாட்டு நாணயங்களிலேயேய முதலீடுகளை மேற்கொள்ள அனுமதீக்கவேண்டும் என்றார் அவர்.

சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் விசேட ஆலோசகராப் தற்போது பணியாற்றும் எரிக்சொல் ஹெய்ம் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முதலீட்டாளர்கள் தமது தேவையைப் பூர்த்தி செய்ய15 அமைச்சுகளிற்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படக்கூடாது ☞ 2

# பரீட்சைப் பணிகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்துவேன்

## ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை

- மாணவர்களை பணயக்கைதிகளாக்க எந்தக் குழுவுக்கும் இடமளிக்க முடியாது
- விடைத்தாள் திருத்தத்துக்கு மாற்றுயோசனை வார இறுதி வரையில் கால அவகாசம்
- அரச, தனியார் கூட்டிணைந்து வருடாந்தம் பொறியல், மருத்துவ பட்டதாரிகள் உருவாக்கம்

பரீட்சைப் பணிகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விடைத்தாள் திருத்தும் பணிகளை முடக்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போகிறார் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உயர்தரபரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளுக்கான மாற்று யோசனைகள் மற்றும் உரிய வேலைத்திட்டங்களை இவ்வார இறுதிக்குள் அறிவியுங்கள் என்று குறிப்பிட்ட அவர், வருடாந்தம் 10,000 பொறியியல் பட்டதாரிகளையும் 5,000 மருத் ☞ 2

## வவுனியாவைச் சேர்ந்த ஐவர் தமிழநாட்டில் தஞ்சமடைவு

ந.லோகதயாளன்.
யாழ்ப்பாணம், ஏப்.19

இலங்கையில் இருந்து ஐவர் புதன் கிழமை அதிகாலை படகு மூலம் இந்தியாவின் தமிழ்நாடு, அரிச்சல்முனையைச் சென்றடைந்துள்ளனர்.

இவர்கள்ஐவரும்அகதிகளாகத்தமிழ்நாட்டில் தஞ்சம் அடைந்திருக்கின்றனர் என்று அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர். .

வவுனியா மாவட்டம் தேக்கன் தோட்டத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்த வர்களான தாய், தந்தை மற்றும் 3 சிறுவர்களே தமிழ் நாட்டுக்குச் சென்றுள்ளனர்.

அவர்களிடம் விசாணை நடத்தப் ☞ 2

## முழு அடைப்புப் போராட்டத்திற்கு யாழ். வணிக கழகம் முழு ஆதரவு.

தமிழ்க் கட்சிகளின் அழைப்பில் ஏப்ரல் 25 இடம்பெற உள்ள வடக்கு கிழக்கு தழுவிய முழு அடைப்புப் போராட்டத்திற்கு யாழ்ப்பாண வணிகர் கழகமும் தனது முழு ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இன்றைய தினம் யாழ்ப்பாண வணிகக் கழகத்திற்கும் தமிழ்க் கட்சிகளின்தலைவர்களுகும் இடையிலானசந்திப்புவணிகர் கழகத்தில் இடம் பெற்றது.

இதன்போதுயாழ்ப்பாண வணிகர் கழகம் அனைத்து கடைகளையும் பூட்டி முழு ஆதரவு வழங்குவதாக தெரிவித்தது.

சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராஜா தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் புளொட் சார்பில் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




## உள்ளாட்சித் தேர்தலை உடன் நடத்துங்கள் அல்லது வேட்புமனுக்களை நிராகரியுங்கள்

### நாடாளுமன்ற உறுப்பினர் கம்பன்பில வலியுறுத்து

அரசமைப்புக்கு அமைய உள்ளுராட்சி மன்றத் தேர்தலை நடத்தவேண்டும் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களைநிராகரிக்க வேண்டும் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எதுல்கோட்டேவில் உள்ள குறித்த கட்சியின் தலைமையத்தில்புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நகர சபைகள் மற்றும் பிரதேசசபைதேர்தல்சட்டத்தின் பிரகாரம், உள்ளுராட்சி மன்றத் தேர்தலை மார்ச் 9 நடத்துவதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கடந்தஜனவரி21அறிவித்தது.

தேர்தல் தொடர்பில் நிதியமைச்சுடன் பேச்சு நடத்தாமல் ஆணைக்குழு தேர்தல் தொடர்பான அறிவிப்புக்களைவிடுத்ததால் நிதி விடுவிப்பை நிதியமைச்சு முடக்கியது.

தேர்தல் ஆணைக்குழு வாக்கெடுப்புக்கு திகதி அறிவிப்பதும் பின்னர் நிதி நெருக்கடியால் தேர்தல் வாக்கெடுப்பு ஒத்திவைப்பதும் வழமையாகிவிட்டது. ☞ 2

## 5 அரச நிறுவனங்களுக்கு 'கோப்' குழு அழைப்பு

சிறிலங்கன் ஏயார் விமான நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு அரச நிறுவனங்களை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப்), முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கன் விமான நிறுவனம், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளிட்ட நிறுவனங்களுக்கே அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவ்வறிக்கையில், ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தை ஏப்ரல் 25, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவை ஏப்ரல் 26 கோப் குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.இதற்கு முன்னர் வழங்கப்பட்ட கோப் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதன் முன்னேற்றம் குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளது.

சிறிலங்கன் விமான நிறுவனத்தை ஏப்ரல் 27, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை ஏப்ரல் 28 என்று கோப் குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளதோடு, இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையை மே 09 முன்னிலையாகுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது.

## குரங்குகளைச் தருமாறு சீனா ஒருபோதும் கேட்கவில்லை

### தூதரகம் விளக்கமளிப்பு

ஒரு இலட்சம் குரங்குகளைபெற்றுக்கொள்வதற்காக இலங்கையின் எந்தத் தரப்பினரிடத்திலும் சீனா கோரிக்கை விடுக்கவில்லை என்று இலங்கைக்கான சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

குறித்த விடயம் சம்பந்தமாக தனது கீச்சக (டுவிட்டர்) பக்கத்தில் சீனத்தூதரகம் விடுத்துள்ள தெளிவுபடுத்தல் அறிவிப்பில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

இலங்கையிலிருந்து குரங்குகளை ஏற்றுமதி செய்யும் கோரிக்கை தொடர்பில் எந்த வகையிலும் அறிந்திருக்கவில்லை என்று சீனாவில் உள்ள வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியை மேற்பார்வை செய்யும் பிரதான அரச திணைக்களமான, சீனத் தேசிய வனவியல் மற்றும் புல்வெளி நிர்வாகம் அறிவித்துள்ளது.



அழிந்து வரும் தாவரங்கள் மற்றும் உயிரினங்களின் வர்த்தகம் தொடர்பான சாசனத்தின் பங்காளியாக சீனா இருப்பதுடன் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தினையும் திருத்தங்களுடன் சர்வதேச தரத்திற்கு அமைவாக நிறைவேற்றியுள்ளது. வனவிலங்குகளின் பாதுகாப்புக்கு சீன அரசு அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ☞ 2

## சீன நிறுவனம் எம்மிடமிருந்து குரங்குகளை கேட்டது உறுதி

### இயற்கையை பாதுகாக்கும் நிறுவனம் தெரிவிப்பு

சீன தனியார் நிறுவனம் ஒன்றுகுரங்குகளைஏற்றுமதி செய்வதற்காக கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளமை உறுதியான விடயம் என்று இலங்கை வனவிலங்குகள் மற்றும் இயற்கையைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் புதன் கிழமை செய்தியாளர்களிடம் அந்த அமைப்பின் முன்னாள் தலைவர் ஸ்ரீயான் டி சில்வா இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஷி செங் வூ யூ அனிமல் பிறித்திங்என்றநிறுவத்தினால் மார்ச் 10 ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. உங்களது நாட்டில்குரங்குகள்தொடர்பில் பிரச்சினைகள் உள்ளது. ஆகவேகுரங்களைப்பெற்றுக் கொள்வதற்கு நாம் தயாராக உள்ளோம். அவற்றை எமது மிருகக் காட்சிசாலைகளுக்காக வழங்குங்கள் என்று அக்கடிதத்தில் குறிப் பிடப் பட்டுள்ளது என்றார்.

கேள்வி: அப்படியென்றால் சீன தூதரம் குரங்குகளை தாம் கோரவில்லை என்று மறுப்பு வெளியிட்டுள்ளதல்லவா?

பதில்:-ஆம், சீனதூதரகம் கூறுவது உண்மை, சீன அரசோ அல்லது சீன தூதரகமோ எந்தவிதமான கோரிக்கையையும் விடுக்கவில்லை. அங்குள்ள நிறுவனம் ஒன்று தான் கோரிக்கை கடிதத்தினை அனுப்பியுள்ளது. ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலூன்றாமல் இருக்க அவரிடம் ஏதாவது உத்தித் திட்டம் இருக்கிறதா என்றால், அதற்கும் இந்தியாவின் சேலைக்குப் பின்னால்தான் ஒளிந்துகொள்வார் என்று நினைக்கின்றேன். ஏனெனில் தமிழ்த் தலைவர்கள் என்னதான் கத்தினாலும் இந்திய விசுவாசத்தை வெளிப்படுத்தினாலும் சீனாவின் ஊடுருவலையும் அவர்களால் தடுக்க முடியாது. இந்தியாவின் நம்பிக்கையையும் அவர்களால் பெற முடியாது என்பதே யதார்த்தம்.

அரசியலில் எல்லாமே கணக்கு வழக்குகள்தானே அன்றி உணர்ச்சி மேலீடுகளுக்கோ விசுவாசங்களுக்கோ இடமில்லை. தமிழ்த் தலைவர்களுக்கு இது புரிய இன்னும் பல காலங்களாகலாம். அப்போது இந்த நாட்டில் தமிழ் இனம் இருந்ததுஎன்கிறவரலாறாவது எஞ்சியிருக்குமோ தெரியாது.

இதையெல்லாம் இங்கு ஏன் சொல்லவேண்டிவந்தது என்றால், சீனாவுக்கு வடக்கு கிழக்கில்இடமளிக்கமாட்டோம் என்றுசித்தார்த்தன்கர்ஜித்துக் கொண்டிருந்தபோதே சீனா அவரதுகாதோரம்தென்றலாய் ஊடுருவிக்கொண்டிருந்தது என்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆம், சீனாவின் சர்வதேச தொலைக்காட்சி ஒளிபரப்பு இப்போது யாழ்ப்பாணத்தில் பரீட்சார்த்தமாக நடக்கிறது. தெளிவாகவும் தெரிகின்றது.

கேபிள் ரிவிக்களும் சற்றலைட் ரிவிக்களும் வந்த பின்னர் அனேகமாகத்தமிழ் மக்கள் பழைய விஎச்எவ், யுஎச்எவ் அன்ரனாக்களைப் பயன்படுத்தும் முறையை மறந்துவிட்டார்கள். அந்த அலைவரிசைகள் ஊடாக உள்ளே ஊடுருவியுள்ளது சீனத் தொலைக்காட்சி.

சைனீஸ் குளோபல் ரெலிவிசன் நெற்வேற் (சிஜிரிஎன்) அலைவரிசையே தற்போது இலங்கை வானலைகளில் தனது ஒளிபரப்பைப் பரீட்சார்த்தமாகத் தொடங்கியுள்ளது. கேபிள் அல்லது சற்றலைற் போன்றல்ல வானலைகளின் வழி ஒளிபரப்புச்செய்வது. அரசின் அனுமதியின்றி அதனை மேற்கொள்ள முடியாது. பொதுவாக வேற்றுநாட்டு ஒளிபரப்புக்களுக்கு அரசுகள் தமது வானலையைப் பயன்படுத்த அனுமதி கொடுப்பதில்லை. ஆனால், சிஜிரிஎன் காற்றலைகளின் வழியாகவே தனது ஒளிபரப்பை மேற்கொள்கின்றது.

இலங்கைஅரசதொலைக்காட்சிகளான ரூபவாகினி, ஐ ரீவி மற்றும் நேத்ரா ஆகியனவும்ஒருசிலதனியார் தொலைக்காட்சிகளும்மட்டுமே இதுவரையில் வானலைவழியாகத்தமதுஒளிபரப்புக்களை மேற்கொண்டு வருகின்றன.

இதில் அரச தொலைக்காட்சி நிறுவனமான ரூபவாகின்கடந்தபெப்ரவரியில்அலைவரிசை பங்காளிகளைக் கோரியிருந்தது. இதனைப் பயன்படுத்திக்கொண்டு சீன அலைவரிசை நுழைந்ததா என்பது தெரியவில்லை. ஆனால் நுழைந்துவிட்டது. நாடு முழுவதும் இந்த அலைவரிசை காற்றலைகளில் தவழ்கிறதா என்பதை வாசகர்களே ஒரு தடவை சோதித்துவிட்டு அறியத்தாருங்கள். யாழ்ப்பாணத்தில் அது நன்கு வேலை செய்கிறது என்பதை மட்டும் எம்மால் உறுதிப்படுத்த முடிந்திருக்கிறது இப்போதைக்கு.

இவ்வாறு இயங்கும் சைனீஸ் குளோபல் ரெலிவிசன் நெற்வோர்க் முன்னர் ஓர் தொலைபேசி நிறுவனம் வழங்கிய தொலைக்காட்சி சேவை இணைப்பு மூலம் ஒளிபரப்பப்பட்டு வந்தது. அது கட்டண சேவை. இது இலவச சேவை. விஎச்எவ் அன்ரனாவைப் பூட்டி யார் வேண்டுமானாலும் இந்த இலவச சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**இடிமின்னல்**

## பரீட்சைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துவ பட்டதாரிகளையும் உருவாக்க அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

கல்வி மற்றும் உயர் கல்வி, தொழில் மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்புஅமைச்சுக்களின்2023ஆம்ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட யோசனைகள் தொடர்பிலான பகுப்பாய்வுக் கூட்டம் புதன் கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பரீட்சைப் பணிகளை அத்தியாவசிய செயற்பாடுகளாக முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான சட்ட ஏற்பாடுகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளேன். கடந்த வருடம்பரீட்சைவிடைத்தாள்களைத் திருத்தும் பணிகளில் ஈடுபட்டகுழுவினரை,கொண்டு இம்முறை விடைத் தாள்களைத்திருத்தும்பணிகளை முன்னெடுக்குமாறும் பணிப்புரை விடுகின்றேன்.

உயர்தரபரீட்சைவிடைத் தாள்களைத் திருத்தும் பணிகளுக்கான மாற்று யோசனைகள் மற்றும் உரிய வேலைத்திட்டங்களை இந்த வாரஇறுதிக்குள்அறிவிப்பதற்கு அதிகாரிகள்நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். பரீட்சைகள் தொடர்பிலான பணிகளை அத்தியாவசிய சேவையாகபிரகடனப்படுத்தத் தேவையான பணிகளை முன்னெடுக்குமாறும் கல்வி துறைசார் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இப்பணிகளில் ஈடுபட மறுப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பில் சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்க உள்ளேன். கல்வி அமைச்சர் இதுதொடர்பில்அறிவித்துள்ள விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி அதற்குரியஅடுத்தகட்டநடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட வேண்டும்

அதேநேரம், கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சையில்அதிகமதிப்பெண்களை பெற்றுக்கொள்ளும் மாணவர்களில் குறைந்த பட்சம் வருடத்திற்கு நால்வரையேனும் ஒக்ஸ்போர்ட், கேம்பிரிஜ் மற்றும் ஹார்வட் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டியுள்ளது. வருடாந்தம் மாணவர் எண்ணிக்கையில் அதிகரிப்பை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

அரச பல்கலைக் கழகங்களைப் போன்றே தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கும்அவ்வாறானவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும்அதேநேரம்,தொழில்நுட்ப கல்வியில் மாணவர்களை அதிகளவில் ஈடுபடுத்த வேண்டும். உயர் கல்வி மற்றும் சாதாரண தர கல்வி வசதிகள் கொண்டசகலபாடசாலைகளுக்கு, இணைய வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றைமுன்மொழியுமாறு தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல் வருடாந்தம் 10,000 பொறியியல் பட்டதாரிகளையும் 5,000 மருத்துவ பட்டதாரிகளையும்உருவாக்குவதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்க மற்றும் தனியார்பல்கலைக்கழகங்கள் இணைந்து முன்னெடுக்க வேண்டும். அதற்குரிய குழுவொன்றை நியமித்து அறிக்கையொன்றைசமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 350இற்கும் மேற்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சி கல்லூரிகளை ஒன்றிணைத்து வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நடைமுறையிலிருக்கும் தொழிலாளர் சட்டம் தொழிலாளர்களுக்கு அவசியமான பல்வேறு மூலங்களை கொண்டுள்ளதால், அதற்கு மாறான தனிப்பட்ட தொழில் முறைச் சட்டம் ஒன்று அவசியமாகின்றது. அதற்கு அவசியமான சட்டமூலத்தை மே மாதத்திற்குள் சமர்பிக்குமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இதேவேளை, எம்.எல்.ஏ.ஏம் ஹிஸ்புல்லாவினால் ஆரம்பிக்கப்பட்ட கிழக்கு தனியார் பல்கலைக்கழகம் தொடர்பில் ஆராய்வதற்கு இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொலவின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள உப குழுவின் நடவடிக்கைள்தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

## குரங்குகளைச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பிடம் வழங்குவதோடு, சர்வதேசக் கடமைகளை அர்ப்பணிப்புடன் சீனா நிறைவேற்றுகின்றது - என்றுள்ளது.

## உள்ளாட்சித்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் ஆணைக் குழு, நிதியமைச்சு ஆகிய தரப்பினரது முரண்பாடான செயற்பாடுகளினால் வேட்பு மனுத் தாக்கல் செய்து விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்கள்பொருளாதார ரீதியில்பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தேர்தல் சட்டத்தின் 102ஆவது உறுப்புரையில், 'தேர்தல் ஒன்றுக்கு போட்டியிட தீர்மானிக்கும் அரச சேவையாளர் வேட்பு மனு தாக்கல் செய்து, தேர்தல் பணிகள்நிறைவுபெறும்வரை சேவையில் ஈடுபடக்கூடாது' என குறிப்பிடப்பட்டுள்ளது. விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்களுக்குசம்பளம் வழங்குவது தொடர்பில் தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

தேர்தல் இழுபறி நிலையில் உள்ள பின்னணியில் விடுமுறையில் உள்ள அரச சேவையாளர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தை மாத்திரம் வழங்க இந்த ஆட்சி தீர்மானித்துள்ளது. தற்போதைய பொருளாதாரப் பாதிப்பு, வாழ்க்கைச் செலவுக்கு மத்தியில்அடிப்படைச்சம்பளத்தைக் கொண்டு எவ்வாறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்?

தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். அரசமைப்புக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களை நீக்கவேண்டும். ஆட்சியாளர்களின் முறையற்ற செயற்பாட்டினால் அரச சேவையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் - என்றார்.

## வவுனியாவைச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு வருவதாகவும் அது முடிந்த பின்னர் அவர்கள் அகதி முகாமுக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் தமிழ்நாடு பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சீன .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் அமெரிக்காவுக்கு ஒரு கடிதத்தினை அனுப்பினால் அது இலங்கை அரசு அனுப்பிய கடிதமாகக் கொள்ள முடியாதல்லவா? அதுபோன்ற நிலைமைதான் காணப்படுகின்றது என்றார்.

## கடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறுபட்டுள்ளது. கடன் சீரமைப்பை மறைமுகமாகச் செய்யவேண்டாம்என்றுநாம் தொடர்ச்சியாககூறுகின்றோம்.

உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்க வேண்டியிருந்தால் அது தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தி இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அதற்குநாமும் தயாராகவே உள்ளோம். உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்பது பற்றி பேசவேண்டாம் என்றார்கள். உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைக்கப்போவதில்லை என்றும் கூறினார்கள்.

கடன் வழங்கியவர்கள் கடன்களை மறுசீரமைப்பதற்குத் தன்னார்வத்துடன் முன்வர வேண்டும் என்றும் ஆட்சியாளர்கள் கூறுகின்றார்கள். உண்மையில் தன்னார்வத்துடன்கடன்களை மறுசீரமைப்பதற்கு முயன்றால் என்ன நிகழும் என்பதற்கு எம்முன்னே முன்னுதாரங்கள் உள்ளன. கானா நாட்டில் தன்னார்வமாக கடன்களை மறுசீரமைக்க முயன்றமையால் நிலைமைகள் எவ்வாறு இருந்தன என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஆட்சியாளர்கள்எதிர்பார்ப்பதைப்போன்று தன்னார்வமாக உள்நாட்டு கடன் வழங்குநர்கள் முன்வரப் போவதில்லை. ஆகவே உள்நாட்டு கடன் மறுசீரமைப்பையும், வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பையும் அடுத்து வரும் மாதங்களில் மேற்கொள்ள நேரிடும். அது மிகச் சவாலான செயற்பாடாகும் என்றார்.

## 2 விடயங்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள்ஓரிடத்திலேயேமுதலீடு தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.

இந்தியா சீனாவுடன் நெருக்கமாக இணைந்து செயற்படவேண்டும், உலகின் 80 வீதமான சூரிய மின் கலங்கள் மற்றும் மின்சார பற்றறிகள் சீனாவில்தான் தயாரிக்கப்படுகின்றன உலகின்74வீதமானமின்சார கார்கள் சீனாவிலேயே தயாரிக்கப்படுகின்றன. இலங்கையிலும் சூரிய மின் சக்தி உற்பத்தி மற்றும் பயன்பாட்டு வாய்ப்புக்கள்அதிகம்உள்ளன.

அதேபோன்று அதானி நிறுவனம் மன்னாரில் காற்றாலை மின் திட்டத்தை ஆரம்பிக்கும் யோசனையை முன்வைத்துள்ளது,மேலும்; திருகோணமலையில் சூரிய மின்சக்தி திட்டம் ஒன்றிற்கான யோசனையும் காணப்படுகின்றது. இலங்கை இவற்றைப் பயன்படுத்தி இந்தியா சீனாவின் முதலீடுகளை பெறவேண்டும்.

ஆட்சியாளர்கள் உரிய கொள்கைகளை உருவாக்காவிட்டால் முதலீட்டாளர்கள் வேறு நாடுகளைத் தேடிச் செல்வார்கள். அவர்களுக்கு இலங்கை மட்டுமே தெரிவாக இருக்காது - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22









காலைக்கதிர் Kalaikkathir

### முன்னாள் தவிசாளர் வீட்டில் உயிரிழந்த

# வலி. வடக்கு பிரதேச சபை ஊழியரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடந்தன

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனின் வீட்டில், தனக்குத் தானே பெற்றோல் ஊற்றி தீ மூட்டிக் கொண்டதால்



படுகாயமடைந்து உயிரிழந்தார் என்று கூறப்படும், அதே பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் விஜிதாவின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சபையின் முன்னாள் தலைவரின் வீட்டின் முன்பாக வந்து நின்று உடலில் பெற்றோல ஊற்றிக் கொண்ட அவர் தனக்குத் தானே தீமூட்டிக்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் காங்கேசன்துறை தொகுதிக் கிளை செயலாளரும் மாகாண கணக்காய்வுத் திணைக்கள உத்தியோகத்தருமான சோமசுந்தரம் சுகிர்தன் வீட்டிற்குள் தீ மூட்டி குடும்பப் பெண் உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

சம்பவத்தில் குப்பிளான் பகுதியை சேர்ந்த 36 வயதான விஜிதாஎன்றபெண்ணேபரிதாபமாக உயிரிழந்துள்ளார். இவர்வலிகாமம் வடக்குபிரதேசசபையின்மல்லாகம் உப அலுவலகத்தில் கடமையாற்றி வந்தார். அவருக்கு 10 வயதான பெண் பிள்ளை ஒன்றும் உள்ளது.

இந்நிலையில் உயிரிழந்த விஜிதாவின் வீட்டிலேயே கடந்த சில வருடங்களாகத் தவிசாளர் உணவருந்தி வந்துள்ளார். அவரது மனைவியும் இரு பெண் பிள்ளைகளும் வெளிநாடு ஒன்றில் குடியேறியதன் பின்னர் இந்த வழக்கத்தை அவர் ஏற்படுத்திக்கொண்டார்.

விஜிதாவின்பெண்பிள்ளையை வெளியிடங்களுக்கும் கல்வி நடவடிக்கைக்கும் சுகிர்தனே அழைத்துச் செல்வதும் வழக்கமாகி இருந்தது.

இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தனது வீட்டிலிருந்து பெற்றோலுடன் சுகிர்தன் வீட்டுக்கு வந்துள்ளார் விஜிதா. வீட்டிலிருந்துபுறப்படுவதற்கு முன்னர் நகை, பணம் என்பன இருக்குமிடங்களை மகளிடம் காண்பித்து விட்டே சென்றுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

சுகிர்தனின் வீட்டுக்குள்




சென்று தனது உடலில் பெற்றோல் ஊற்றித் தீமூட்டிக் கொண்டுள்ளார் விஜிதா. சுகிர்தன் பின் கதவால் வெளியே வந்து தண்ணீர் ஊற்றி தீயை அணைத்துள்ளார். அதன்பின் விஜிதா ஓடிச்சென்று கிண்றுக்குள் குதித்துள்ளார். அவரை கிணற்றிலிருந்து மீட்டு யாழ்ப்பாணம்தெல்லிப்பழைஆதார வைத்தியசாலையில்சேர்த்தபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது அவர் உடல் 90 வீதம் எரியுண்டநிலையில் காணப்பட்டாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. மேலதிக சிகிச்சைகளுக்கு உட்படுத்தியும் அவரைக் காப்பாற்றமுடியாது என வைத்தியர்கள் தீர்மானித்ததால் சிகிச்சை பயனின்றிதிங்கட்கிழமைமதியம்அவர் உயிரிழந்தார். பின் அவரது உடல் தடீர் இறப்பு விசாரணைகளுக்காகவும் உடற்கூறாய்வுக்காகவும் யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

திங்கட்கிழமை, செவ்வாய்க் கிழமை இரு நாள்களும் விசாரணைகள் மற்றும் உடற்கூறாய்வு மேற்கொள்ளப்பட்டன பின்னர் செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

புதன்கிழமை இறுதி அஞ்சலிக்காக அவரது குப்பிளான் இல்லத்தில் பூதவுடல்வைக்கப்பட்டு,பின்நீதிமன்ற உத்தரவுக்கமைவாக14நாள்களுக்கு அடக்கம் செய்யப்பட்டது.

அவர் தற்கொலை செய்தாரா அல்லது குற்றச்செயல்கள் நடந்தனவா என்பது உறுதியாகாத நிலையில் தவிசாளர் சுகிர்தன் ஞாயிற்றுக்கிழமையே பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டார். அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

விசாரணைகளைத்தொடர்ந்து மறுநாள் திங்கட்கிழமை மாலை விடுவிக்கப்பட்டார் எனக் கூறப்படுகின்றது.

# நல்லூரிலும் பூபதிக்கு நேற்று அஞ்சலி நிகழ்வு



தமிழர்களுக்காக அகிம்சை வழியில் போராடி தன்னுயிரை ஈகம் செய்த அன்னை பூபதியின் 35ஆவது ஆண்டுநினைவேந்தல் யாழ். நல்லூரடியில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு அருகில் புதன்கிழமை நடைபெற்றது.

தமிழ் மக்கள் கூட்டணியின் ஏற்பாட்டில் மாலை 5 மணிக்கு அன்னை பூபதியின் உருவப் படத்திற்கு சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டு நினைவேந்தல் இடம்பெற்றது.

ஈகச்சுடரினை மாவீரரின் தயார் ஒருவர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திலும் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.வீ.விக்கினேஸ்வரன், யாழ் மாநகர முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





# அன்னை பூபதிக்கு நேற்று தருமபுரத்திலும் அஞ்சலி





தியாக தீபம் அன்னை பூபதியின் 35ஆவது ஆண்டு நினைவுநாள் புதன்கிழமை (ஏப். 19) தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், தருமபுரம் பகுதியில்



ஒழுங்குபடுத்தப்பட மண்டபத்தில் சிறந்த முறையில் நிகழ்வு இடம் பெற்றது. கரைச்சிப் பிரதேச சபையின் முன்னால் உறுப்பினர் ஜீவராசா தலைமையில் இடம்பெற்றது இந்நிகழ்வில் முன்னாள் வட மாகானசபையின் கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராசா கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார். கரைச்சிபிரதேசசபையின் முன்னாள் தலைவர் மற்றும் பொதுமக்களும் அன்னைபூபதிக்கு அஞ்சலி செலுத்தினர். (05)





## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தேசிய ஆட்சி எனும் கானல் நீர்

**தேசிய ஆட்சி அதாவது அனைத்துத் தரப்புக்களும் சேர்ந்த ஆட்சி ஒன்றை அமைப்பது பற்றிய செய்திகள் கடந்த சில நாட்களாக ஊடகங்களில் தொடர்ந்து அடிபடுகின்றன. அத்தகைய அழைப்பு எதுவும் தமக்கு வரவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட முக்கிய எதிர்க் கட்சிகள் அனைத்தும் கூறுகின்றன. நாடாளுமன்றத்தில் உள்ள சிறு கட்சிகளுக்கும்கூட அத்தகைய அழைப்புக்கள் வரவில்லை என்றாலும் கூட தேசிய ஆட்சி (அரசு) என்கிற கதையாடல் தொடர்கின்றது.**

**தேசிய ஆட்சி என்பது நாடாளுமன்றத்தில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து முன்னெடுத்துச் செல்லப்படவேண்டியது. ஆனால் இலங்கையில் அரசமைப்பின்படி ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் இணைந்து அமைக்கும் ஆட்சிக்கு தேசிய ஆட்சி என்று பெயரிட்டு வைத்திருக்கிறார்கள். அதாவது நாடாளுமன்றத்தில் உள்ள இரு கட்சிகள் இணைந்து ஒரு ஆட்சியை உருவாக்கினால் அந்தக் கட்சிகளில் உள்ள பலருக்கும் அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு வசதி யாக அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக இந்த உத்தியை வகுத்து வைத்திருக்கிறார்களேதவிர அது உண்மையான தேசிய அரசு அல்ல.**

**இதுபோன்றே 2015 அதிகாரத்தைப் பிடித்த மைத்திரியும் ரணிலும் சேர்ந்து அமைத்ததையும் தேசிய ஆட்சி என்றார்கள். அதனால் நாட்டுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை. இப்போதும் அதுபோன்றே ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரும் பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து ஒரு ஆட்சியை அமைத்துவிட்டு அதற்குத் தேசிய அரசு என்று பெயரிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சிலவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் சேர்த்துக்கொண்டு தேசிய ஆட்சி என்றும் சொல்லக்கூடும்.**

**நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில், நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துத் தரப்புக்களையும் இணைத்து ஒரு தேசிய ஆட்சியை ஏற்படுத்தினால் அது சிறப்பானதாக, பல பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதாக அமையும் என்பது உண்மை. அதற்கு அனைத்துத் தரப்புக்களும் இணைவதற்கான குறைந்தபட்ட தேசிய வேலைத் திட்டம் ஒன்று அல்லது தேசியக் கொள்கை ஒன்று உருவாக்கப்படுதல்வேண்டும். ஆட்சிக்கானவழிவரைபடம் ஒன்றையும் உருவாக்கிக்கொள்ளவேண்டியிருக்கும். இலங்கையில் அப்படி நடபப்பது துர்பலமே!**

**நாட்டின் நலனைவிட மக்களின் நலன்களைவிட கட்சிகளின் நலன்களையும் சுயநலன்களையும் மட்டுமே முக்கியத்துவப்படுத்திச் செயற்படக்கூடிய அரசியல் தலைவர்கள் அனைவரும் ஒரு தேசிய வேலைத் திட்டத்திற்கு இணங்கிச் செல்லமாட்டார்கள். நாடு எத்தகைய சீரழிவிற்குச் சென்றாலும் அதற்குக் காரணமானவர்கள் என்று அடுத்தவர்கள் மீது விரல் சுட்டிவிட்டு அதில் அரசியல் ஆதாயம் தேட முற்படுவார்களே தவிர, நடந்த தவறுகளுக்கெல்லாம் தாமும் காரணம் என்பதை அவர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதனால் பொது வேலைத் திட்டம் அல்லது தேசிய ஆட்சிக்கான பொதுக் கொள்கை ஒன்றை உருவாக்குவது மிக மிகக் கடினமானது.**

**அதனால் அவர்கள் கூட்டுக் கட்சி ஆட்சி ஒன்றையே தேசிய ஆட்சி என்று சொல்லிக்கொண்டு மக்களை ஏமாற்ற முற்படுவார்கள். 75 ஆண்டுகளாக இவ்வாறு ஏமாற்றி ஏமாற்றியே நாட்டைக் குட்டிச்சுவராக்கி தோல்வியடைய வைத்த பின்னரும் இந்த அரசியல்வாதிகள் திருந்தவேமாட்டார்கள் என்பதைத்தான் தேசிய ஆட்சி என்கிற தற்போதைய கதைகளும் மீண்டும் நிரூபிக்கின்றன.**

# நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கு சர்வதேச உதவிகள் தேவை

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி கையேந்தல்

நான் ஆரம்பித்து வைத்ததை ஜனாதிபதி தொடர்கின்றார் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக சர்வதேச நாணயநிதியத்துடனான ஈடுபாடுகள் ஒரு சிறப்பான வெற்றிகரமான முயற்சியாக காணப்படும் எனவும் அலிசப்ரி குறிப்பிட்டுள்ளார்.

நாடு மிகமோசமான நெருக்கடியை எதிர்கொண்ட காலத்தில் நான் நிதியமைச்சராக பணியாற்றினேன் என தெரிவித்துள்ள அலிசப்ரி நானே சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சுகளை ஆரம்பித்தேன் ஜனாதிபதி அதனை தொடர்ந்து முன்னெடுத்தார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான எங்களின் ஈடுபாடு மிகப்பெரிய வெற்றியாக அமையும் என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



எங்கள் பொருளாதாரத்தை பொருத்தவரை நாங்கள் சரியான பாதையில் பயணிக்கின்றோம் எங்கள் பொருளாதாரம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. உள்நாட்டு யுத்தம் கொவிட் பொருளாதார வீழ்ச்சி காரணமாக நாங்கள் பெரும் சவால்களை எதிர்கொண்டோம் என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் அரசாங்கம் வடக்கைசேர்ந்த 12000 இளைஞர்களிற்கு மறுவாழ்வளித்தது, இந்த இளைஞர்களை அரசாங்கம் பராமாக்கின்றது. அவர்களுக்கு நிதி உதவியை வழங்குகின்றது. அவர்களின் சிறந்த எதிர்காலத்துக்கு நாங்கள் ஆதரவளிக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மிகநீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கு எங்களுக்கு சர்வதேச உதவிகள் தேவை எனத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் நாங்கள் இந்தியாவுடன் மேலும் ஒன்றிணைவை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம். இதனடிப்படையில் நாங்கள் இந்தியாவுடனான விமானசேவைகளை அதிகரிக்க முயல்கின்றோம் நாங்கள் விரைவில் இந்தியா இலங்கை படகுச்சேவையை ஆரம்பிப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தனியொரு பிராந்திய கூட்டமைப்புடன் மாத்திரம் இணைந்து செயற்படவிரும்பவில்லை. நாங்கள் சீனாவுடன் மேற்குலக மத்திய கிழக்கு நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபடவிரும்புகின்றோம், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு ஸ்ரீலங்கா என்ற பெயரே காரணம் ஆகும்

## வானியலாளர் அனுர பெரேரா கருத்து

சிலோன் என்ற பெயரை ஸ்ரீலங்கா என மாற்றியதே நாடு எதிர்கொண்டுள்ள அனைத்து பிரச்சினைகளிற்கும் காரணம் என விஞ்ஞான ஆசிரியரும் வானியலாளருமான அனுர சி பெரேரா தெரிவித்துள்ளார்.





ஸ்ரீ என்ற பெயரே கடந்த சில தசாப்தங்களாக நாடு எதிர்கொண்ட பேரழிவிற்கு காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

எஸ்டபில்யூஆர்டி பண்டாரநாயக்க விஜயகுமாரதுங்க படுகொலை முதல் ஸ்ரீ என பெயரில் ஆரம்பிக்கும் அரச நிறுவனங்கள் வங்குரோத்து நிலையை அடைந்தமைக்கும் பெயர் மாற்றமே காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடைசி மன்னனின் பெயர் கூட ஸ்ரீவிக்கிரமசிங்க ராஜசிங்க எனவும் அனுர சி பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கட்சிகள் - தலைவர்கள் அரசாங்க நிறுவனங்களின் பெயர்கள் முன்னால் ஸ்ரீ என்பதை பயன்படுத்தியமை பெரும் வங்குரோத்து நிலையை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

1956 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது முதல் எங்கள் நாட்டுக்கு தீமையான காலம் ஆரம்பமானது எனத் தெரிவித்துள்ள அவர், ஸ்ரீ என்ற சொல்லை வாகனங்களின் இலக்கத்தகடுகளிற்கு பயன்படுத்திய பின்னர் சிங்கள தமிழ் சமூகங்களிற்கு இடையில் மோதல் ஆரம்பமானது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மோதலின்போது நாடு பெருமளவு உயிரிழப்புகளை சந்தித்தது சொத்துக்களும் அழிக்கப்பட்டன என அவர் தெரிவித்துள்ளார்

பின்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரகட்சியின் ஸ்தாபகர் கொல்லப்பட்டார் எனவும் என விஞ்ஞான ஆசிரியரும் வானியலாளருமான அனுர சி பெரேரா தெரிவித்துள்ளார்.

# ஸஹ்ரானின் வண்ணாத்துவில்லு தோட்டத்தில் புதையல் தோண்ட முயற்சித்த இருவர் கைது!

## அவர்கள் அதிரடிப்படையினர் எனத் தகவல்

பயங்கரவாதி ஸஹ்ரான் ஹாஷிமுக்குச் சொந்தமான புத்தளம், வண்ணாத்தவில்லு தவில்லுவ, லாக்டோ தோட்டத்தில் உள்ள இடம் ஒன்றில் புதையல் அகழ்வில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கான்ஸ்டபிள்கள் இருவர், நேற்று (புதன்கிழமை) அதிகாலை கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸ் விசேட அதிரடிப் படை தெரிவித்துள்ளது.

புதையலைபெற்றுக்கொள்வதற்காக யாகம் செய்ததாகக் கூறப்படும் பூசகர் சோதனை நடத்தப்பட்டபோது தப்பிச்சென்றார் என பொலிஸ் விசேட அதிரடிப்படையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தப்பியோடிய நபரை கைதுசெய்ய விசேட அதிரடிப் படையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய பொலிஸ் விசேட அதிரடிப்படையின் குருணாகல் முகாமை சேர்ந்த அதிரடிப்படையினரால் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.



கைதுசெய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பதுளை தல்தென பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் மற்றைய பொலிஸ் கான்ஸ்டபிள் முனமல்தெனிய பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைப் பொருளுக்கு அடிமையானவர் பொலிஸ்நிலையத்தில் தற்கொலை முயற்சி!

ஹெரொயின் போதைப் பொருளுடன் கைதான ஓர் இளைஞன் பொலிஸ் நிலையத்தில் வைத்து போத்தல் ஒன்றை உடைத்து அதன் மூலம் தனது கழுத்தை வெட்டி தற்கொலை செய்ய எடுத்த முயற்சி தடுக்கப்பட்டுள்ளது.

குருணாகல் பொலிஸ் நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட இளைஞனை விசாரணைக்கு உட்படுத்திக்கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சந்தேக நபர் குருணாகல் கல்வல பிதேசத்தைச் சேர்ந்த 29 வயது நபராவார். காயமடைந்த சந்தேக நபர் குருணாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# சிகிச்சைக்குச் செல்வோருக்கு மயக்க மருந்து கொடுத்து தங்கநகைகள் அபகரிக்கப்பட்டன

## கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சம்பவம்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் செல்லும் வயோதிபர் மற்றும் நடுத்தர வயதுப் பெண்களுக்கு மயக்க மருந்து கொடுத்து அவர்களின் பணம் மற்றும் தங்க நகைகளை அபகரித்த பெண் ஒருவரும் ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டார் என மருதானை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு அபகரிக்கப்பட்ட சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் வெலிகம பிரதேசத்தில் தங்கம் கொள்வனவு செய்யும் இடமொன்றுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சிகிச்சைக்குச் சென்ற பெண் ஒருவரிடம், நட்பு பாராட்டி, அவரை அங்கிருந்து வெளியே அழைத்துச்சென்று உணவு மற்றும் பானங்களில் போதைப்பொருளைக் கலந்துகொடுத்த பின்னர் அவர்களிடமிருந்த தங்க நகைகளை அபகரித்த சம்பவம் ஒன்று தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோதே இந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்த விசாரணையின்போதே சந்தேக நபர்களான இவர்கள் இருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தற்போது விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

# இ.மி.சவின் கொலன்னாவை, துல்ஹிரியவிலுள்ள ஜெனரேட்டர்கள் அம்பாந்தோட்டைக்கு மாற்றம்!

இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான கொலன்னாவை மற்றும் துல்ஹிரியவில் நிறுவப்பட்டுள்ள டீசல் மின்பிறப்பாக்கிகளை (ஜெனரேட்டர்கள்) தென் பகுதிக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தென் பகுதியில் எதிர்கொள்ளப்படும் மின்சாரம் வழங்கல் சவால்களுக்கு தீர்வு காணும் வகையிலேயே இலங்கை மின்சார சபை இவ்வாறு தீர்மானித்துள்ளது.

30 மெகாவாட் திறன் கொண்ட இந்த 30 ஜெனரேட்டர்களுக்கு மிகவும் பொருத்தமான இடம் அம்பாந்தோட்டை என அடையாளம் காணப்பட்டுள்ள நிலையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# யாழ். குடாநாட்டில் மீளக் கொரோனா?

## 5 பேருக்கு ஒட்சிசன் வழங்கல்! ஆபத்தான நிலையில் ஒருவர்

யாழ். குடாநாட்டில் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட 5 பேருக்கு தனிமைப்படுத்தல் விடுதியில் வைத்து ஒட்சிசன் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் ஒருவர் ஆபத்தான கட்டத்தில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு காய்ச்சலுக்கு சிகிச்சைபெறச் சென்ற ஒருவருக்கு கொவிட் தொற்றுக்குரிய அறிகுறி காணப்பட்டதையடுத்து அவருக்குச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் அவருக்கு தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

இதனையடுத்து, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக விடுதிகளில் சிகிச்சை பெற்று வந்தவர்களுக்கு கொவிட் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 3 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். அனைவரும் தனிமைப்படுத்தல் விடுதியில் வைத்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களிலும் இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருந்தது. கொவிட்டின் திரிபு வைரஸால் இத்தகைய பாதிப்பு உருவாகியிருந்தது.

அதேபோன்று தற்போதும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் 5 பேருக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டு வருகின்றது.

அவர்களில் ஒருவரது உடல் நிலை மோசமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டாம் என்று கொழும்பு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து போதனா வைத்தியசாலையில் நோயாளிகளுக்கு கொவிட் சோதனை முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ந்தும் இந்தச் சோதனைகளை முன்னெடுப்பதற்கான அனுமதி போதனா வைத்தியசாலையால் கோரப்பட்டிருந்தது.


இந்த நிலையில், கொவிட் தொற்றைக் கண்டறிவதற்கான சோதனையை முன்னெடுக்கவேண்டாம் என்று சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளரால் திங்கட்கிழமை சூம் செயலி ஊடாக முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலிலும் இந்தத் தகவல் சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

காய்ச்சலுக்கு சிகிச்சை பெற வருபவர்களில் கொவிட் தொற்றுக்குரிய அறிகுறிகளைக் கொண்டிருந்தால், அவர்களுக்கு வேறு நோய்கள் இனங்காணப்படாவிட்டால் மாத்திரமே கொவிட் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு அமைச்சு வாய்மொழி மூலமாக அறிவுறுத்தியுள்ளது.

# சிவாஜி கணேசன் குறித்த நூல் யாழ். பல்கலையில் அறிமுகம்

## ராம்குமார் கணேசனும் கலந்துகொள்கிறார்




நடிகர் திலகம் சிவாஜி கணேசன் குறித்து தமிழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் முனைவர் மருதுமோகன், சென்னை பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து எழுதிய "சிவாஜி கணேசன்" எனும் நூலின் அறிமுக விழா எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறுகின்றது.

நடிகர் திலகத்தின் மகன் ராம்குமார் கணேசன் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவதற்காக வருகைதருகின்றார்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தொடக்கவுரையை இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து ''நீங்கா நினைவில் சிவாஜி'' என்ற தலைப்பில் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவின் சிறப்புரை இடம்பெறும்.

நூலாசிரியர் அறிமுகத்தை சிவா பிள்ளை நிகழ்த்த, நூல் அறிமுக உரையை முனைவர் கா.வெ.செ.மருதுமோகன் நிகழ்த்துவார். யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா நூலை வெளியிடுவார். ராம்குமார் சிவாஜி கணேசன் பிரதிகளைக் கையளிப்பார்.

முனைவர் கோ.சகாதேவி, முத்தையாபிள்ளை சிறிகாந்த், தேவராயபிள்ளை லெட்சுமணன் ராஜ், டாக்டர் சதீஸ்குமார் சிவலிங்கம், முனைவர் மதிவாணன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவார்கள்.

இதனைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்ச்சியாக இலங்கை, இந்திய பேச்சாளர்கள் பங்குகொள்ளும் பட்டிமன்றம் ஒன்றும் இடம்பெறும். செந்தமிழ்ச் சொல்லருவி சந்திர மௌலி லலீசன் இதற்குத் தலைமை தாங்குவார். ஆர்வமுள்ள அனைவரும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் பொதுமக்களை அழைக்கின்றார்கள். பிரவேசம் இலவசம்.

# குருணாகல், ஹெட்டிப்பொலவில் வாகன விபத்தில் மாணவன் சாவு






குருணாகல், ஹெட்டிப்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் பலியானார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூனமல்தெனிய - கட்டுப்பெத்த வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் பலியானவர் அனுக்கன பிரதேசத்தைச் சேர்ந்த 11 வயது மாணவனாவார். மேற்படி மாணவன் இ.போ.ச பஸில் இருந்து இறங்கி ஒரு புறமிருந்து மறுபுறமாக பாதையை மாறும் போதே சிறிய ரக லொறி ஒன்றால் மோதப்பட்டு இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த சிறுவன் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி மரணித்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஹெட்டிப்பொல பொலிஸார்

# இலங்கை சிறுவர்களை ஐரோப்பாவிற்கு கடத்திய மலேசிய தம்பதியினர் கைது

மலேசிய கடவுச்சீட்டுகளை பயன்படுத்தி இலங்கையை சேர்ந்த சிறுவர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு கடத்தும் கும்பலொன்றை மலேசிய அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

கோலாலம்பூரில் தம்பதியினர் கைதுசெய்யப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து இலங்கையை சேர்ந்த சிறுவர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு கடத்தும் நடவடிக்கை தொடர்பாகத் தெரியவந்துள்ளது.

பஹ்னு இன்டநசனல்ஸ் என்ற நிறுவனத்தினர் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

12 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் உள்ள வறிய மலேசிய குடும்பங்களிடமிருந்து அவர்களின் விவரங்களை பெற்று அதனைப் பயன்படுத்தி இலங்கை சிறுவர்களை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு கடத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்றன என மலேசியாவின் குடிவரவு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ருஸ்லின் யுசோ தெரிவித்துள்ளார்.

12 வயதிற்கு உட்பட்ட குடும்பங்களுக்கு கடவுச்சீட்டு வழங்குவதாக தெரிவித்து அவர்களை குடிவரவு திணைக்களத்துக்கு அழைத்து மலேசிய சிறுவர்களின் பிறப்பத்தாட்சி போன்றவற்றை இந்த கும்பலை சேர்ந்தவர்கள் பெற்றுக்கொண்டனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குடிவரவு திணைக்களத்தில் விண்ணப்பப் படிவங்கள் விசாரணைக்கு உட்படுத்தப் படும்போது இலங்கை சிறுவர் களை அழைத்து கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்வார்கள். இதன்பின்னர் இலங்கை பிள்ளைகளை மலேசிய கடவுச்சீட்டில் ஐரோப்பிய நாடுகளுக்கு அழைத்துச்செல்லும் நடவடிக்கைகளில் மலேசிய தம்பதியினர் ஈடுபடுவார்கள் என மலேசியாவின் குடிவரவு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ருஸ்லின் யுசோ தெரிவித்துள்ளார்.

இலங்கை குழந்தையொன்றுக்கு கடவுச்சீட்டை பெறுவதற்காக மலேசிய தம்பதியினர் கோலாலம்பூர் குடிவரவு திணைக்களத்துக்கு சென்றவேளை இந்தத் தம்பதியினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



# பொலன்னறுவையில் கைது

பொலன்னறுவையின் ஜெயந்திபுர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு முன்பாக இருவரைத் தாக்கி காயப்படுத்தியதாக கூறப்படும் மூன்று சிவில் பாதுகாப்பு படை வீரர்களை திங்கட்கிழமை சந்தேகத்தின் பேரில் சூரியபுர பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஜெயந்திபுர மற்றும் பன்சல் கொடல்ல ஆகிய சிவில் பாதுகாப்புப் படையின் துணை முகாம்களில் பணிபுரியும் மூன்று வீரர்களே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 27,39 மற்றும் 37 வயதுடையவர்களாவர்.

# 23.26 மில்லியன் ரூபா செலவில் கிழக்கில் வீதிச் செப்பனிடல்



கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிரான் கிளைப் பாலம் கடந்த டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி ஏற்பட்ட அதீத வெள்ளம் காரணமாக உடைந்து விழுந்திருந்தது.

அதனை தொடர்ந்து ஏற்பட்ட போக்குவரத்து ஸ்தம்பிதத்தை நீக்கும் முகமாக துரிதகதியில் செயல்பட்டு வெறும் ஓரிரு வார காலப்பகுதிக்குள் தற்காலிக மாற்றுப்பாதை அமைக்கப்பட;டது.

பின்னர் நாட்டில் நிலவிய மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் 23.26 மில்லியன் ரூபா செலவில் புதிய கிரான் கிளைப்பாலத்தை நிறுவி நேற்று (புதன்கிழமை) சம்பிரதாய பூர்வமாக மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.



மட்டக்களப்பு மாவட்டத்தின் முதுகெலும்பாக பொருளாதார ரீதியில் உற்பத்திக்கு பங்களிப்பு செய்யும் அநேக விவசாய மற்றும் மேட்டுநில காணிகள் மற்றும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகள் போன்றவற்றை இணைக்கும் முக்கிய பாதை மார்க்கமாக குறித்த பாலம் அமைந்திருந்தது. அதன் காரணமாகவே மிக விரைவாக இந்தக் கிளைப்பாலம் அமைக்கப்பட்டது.

மேலும் அதனுடன் இணைந்ததாக 2.5 கிலோமீற்றர் நீளமான கிரான் புலிபாய்ந்தகல் வீதியினை செப்பனிடும் பணிகளும் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

இதன்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் பொன்னையா பரதன், நிறைவேற்று பொறியியலாளர் அருமைநாயகம் லிங்கேஸ்வரன், பொறியியலாளர் சர்ஜீன், கோறளைப்பற்று தெற்கு கிரான் ADP சிவநேசராஜா, தொழிநுட்ப உத்தியோகத்தர் தயாபரன், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பிரதம பொருளாளர் ஆறுமுகம் தேவராஜ், மட்டளப்பு மாவட்ட அமைப்பாளர் நவரெத்தினம் திருநாவுக்கரசு உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்களென பலரும் கலந்து கொண்டனர்.

# தேவையற்ற விதமாக நடமாடுவதை வெப்ப காலத்தில் தவிர்க்க அறிவுரை

தெற்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களும் மொனராகலை, குருணா கலை ஆகிய மாவட்டங்களில் வெப்பநிலை அதிகரிக்கும் என எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் மனித உடல் வெப்பநிலை தீவிர எச்சரிக்கை நிலை வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளியிடங்களில் தேவையற்ற விதமாக நடமாடுவதை தவிர்க்குமாறும் அதிக நீரை பருகுமாறும் வெளிர்நிறத்திலான மெல்லிய ஆடையை அணியுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கச்சா எண்ணெய் விலையில் வீழ்ச்சி!

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை புதன்கிழமை நிலைவரப்படி சரிவை கண்டுள்ளது.

பிரன்ட் கச்சா எண்ணெய் பரல் ஒன்றின் விலை 7 டொலர்கள் குறைந்துள்ளதுடன், அதன் விலை 84.70 ஆக பதிவாகியுள்ளது.



# Malaysia Tour

## 5 DAYS 4 NIGHTS








INCLUSION

- 04 Night stay in Kuala Lumpur
- Daily breakfast at hotel
- Return AirTicket
- Getting Highland tour with cable car
- City tour on arrival day
- Evening tour to twin tower
- Batu caves temple visit
- Putrajaya city tour

**LKR 148,000.00**
For Early Booking

Travel Date: 19 - 23 May 2023

Semba
Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.04.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 06 புதன்கிழமை 19.04.2023 கதிர் 33

## மகிந்த – ரணில் ரகசிய சந்திப்பு

### பல முக்கிய விடயங்கள் குறித்து இருவரும் ஆராய்வு



(தன்வீன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்வுக்கும் இடையில் இரகசியச் சந்திப்பு நடைபெற்றுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பில் அவர்கள் இருவர் மட்டுமே பங்கேற்றனர் என்றும் கூறப்படுகின்றது. தற்போதைய அரசியல் சூழலில் அவர்கள் இருவருக்கும் இடையிலான பேச்சில் பல முக்கிய விடயங்கள் குறித்து தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்று இருவருக்கும் நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

இருப்பினும் ஜனாதிபதிக்கும் முன்னாள் ஜனாதிபதிக்கும் இடையில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பான எவ்விதமான உத்தியோகபூர்வமான தகவல்களும் வெளியிடப்படவில்லை.

இச்சந்திப்பு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொது ஜன பெரமுன தரப்பினரும் தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை.

## தேசிய அரசில் மனோவும் பங்கேற்கும் செய்தி பொய்

### அவரே மறுக்கின்றார்



ஏப்ரல் 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான பிரேரணையை நான் கூட்டாக முன்வைக்க உள்ளதாக வெளியான செய்திகளில் உண்மை இல்லை. இது திரித்து கூறப்படும் பொய்யான செய்தி. ஆளுந்தரப்பில் இருந்து 2

## பாசத்திற்கான யாத்திரை கொழும்புக்குப் புறப்பாடு

### நல்லூரிலிருந்தும் கிளம்பியது



(எஸ்.நிதர்ஷன்)

இன்றைய ஆட்சியின் அடக்குமுறைக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் "பாசத்திற்கான யாத்திரை" இன்று காலை தொடங்கியது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் காலையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து யாத்திரை தொடங்கியது. இதன் இறுதி நாள் நிகழ்வுகள் ஏப்ரல் 21 கொழும்பில் இடம்பெறும்..

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க தலைமையில் நாட்டின் 5 இடங்களில் இருந்து இந்த "பாசத்திற்கான யாத்திரை" தொடங்கியது. இவை அனைத்தும் ஏப்ரல் 21 கொழும்பைச் சென்றடையும்.

இன்றைய ஆட்சியின் அடக்குமுறைகளுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து இந்த யாத்திரையை ஏற்பாடு செய்துள்ளன.

இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் இலங்கையர்களாக வாழ்வதற்கான அடிப்படை உரிமையைக் கோருவதே இந்த யாத்திரையின் முக்கியமான நோக்கம் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்தது.

நல்லூரில் நடந்த இன்றைய யாத்திரைத் தொடக்க நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்கள் உள்ளிட்ட ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

யாத்திரை நல்லூரிலிருந்து யாழ். நகரைச் சென்றடைந்தபோது, அங்கு ஆட்சியாளர்களுக்கு எதிரான கையெழுத்துச் சேகரிப்பும் இடம்பெற்றது.

## யாழ். மாவட்டத்தில் வெள்ளை ஈ தாக்கத்தினால் 5000 தென்னைகள் பாதிப்பு

### கட்டுப்படுத்த அரசு அதிகாரிகள் நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் வெள்ளை ஈ தாக்கத்தினால் கிட்டத்தட்ட 5,000 தென்னைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 75 வீதமான தென்னைகளில் பாதிப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தென்னை பயிர்செய்கைசபையின் யாழ் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.

இன்று செய்தியாளர்களிடம் அவரர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் வெள்ளை ஈ தாக்கத்தினால் தென்னை மரங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றன.

இந்த வருடம் தை 15 அது முதல் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்னர் வடக்கு மாகாணத்தில் அதுவும் யாழ். நகர பகுதியில் ஆஸ்பத்திரி வீதியில் வெள்ளை ஈ தாக்கம் கண்டுபிடிக்கப்பட்டு உடனடியாக அதனை கட்டுப்படுத்தும் செயன்முறைகளை முடுக்கி விட்டோம்.

இருப்பினும் நோய் பரவி தற்பொழுது யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளிலும் நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. இந்த வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துள்ளோம்

கிட்டத்தட்ட யாழ்ப்பாணத்தில் 1500 தென்னை மரங்களுக்கு இந்த கட்டுப்படுத்தல் செயற்திட்டத்தினை மேற்கொண்டுள்ளோம் எனினும் வெள்ளை ஈ தொடர்ச்சியாக பரவிக்கொண்டு செல்கின்றது,

வெள்ளை ஈ என்பதை ஒரு வெள்ளை இலையான் என குறிப்பிடலாம் இது நாலு வகைகளில் உள்ளது இது தென்னையை மட்டும்தான் தாக்கும் இது கூடுதலாக முட்டை போட்டு குடம்பியாக்கி இனப்பெருக்கத்தை அதிகரித்து தென்னை மரத்தினுடைய அடி பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் குறிப்பாக செவ்விளநீர் மரங்களைக் கூடுதலாக தாக்குகின்றது

ஒரு வீட்டில் இரண்டு மூன்று தென்னைமரங்களில் வெள்ளை ஈ தாக்கம் ஏற்படுமாக இருந்தால் அங்கு தென்னை வளம் முற்றாகப் பாதிக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் தற்பொழுது தென்னை வளம் சற்றுப் பெருகிச் செல்கின்றது எனவே இந்த வெள்ளை ஈ தாக்கம் தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் – என்றார். (03)

## ‘கோட்டா கோ கம’ போராட்ட வித்துகளில் ஒருவர் மறைவு

### உயிரை மாய்த்தார் என்று அறிவிப்பு



முன்னாள் ஆட்சியாளர்களுக்கு எதிராகக் காலி முகத்திடலில் மக்கள் போராட்டத்தைத் தொடங்கி முக்கிய பங்காற்றியவரான – ‘கோட்டா கோ கம’வை நிறுவியவர்களில் ஒருவரான – புத்தி பிரபோத கருணாரத்ன திடீரென உயிரிழந்தார். அவர் தற்கொலை செய்துகொண்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு சமூக ஊடகங்களில் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், பிரபோதவின் மறைவு தொடர்பில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த சமூக ஊடகங்களில் சர்ச்சைக்குரிய பதிவொன்றை இட்டுள்ளார்.

‘கோட்டா கோ கம’ கிராமத்தில் முதல் சிறிய குடிசையைக் கட்டியவர் போராட்டத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான புத்தி பிரபோத.

மே 9 தாக்குதலின் போது நாட்டைப் பற்ற வைப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.

புத்தி பிரபோத கருணாரத்ன கடந்த காலங்களில் மஹிந்தவின் உடல் நிலைக்காகப் பிரார்த்தனை செய்தவர். மஹிந்த இறக்கும் வரை காத்திருந்தவர்.

அவர் நீண்டகாலமாக மன உளைச்சலில் இருந்து வந்திருக்கிறார்.

அவர் மன உளைச்சலுக்கு சிகிச்சை பெற்று வந்தது தற்போது தெரியவந்துள்ளது. திரும்பிப் பார்க்கும் போது, காலிமுகத்திடல் போராட்டம் மனநோயால் பாதிக்கப்பட்ட பலரால் வழி நடத்தப்பட்டிருக்கின்றது.

போராட்டம் தொடங்கி ஓராண்டு முடிவதற்குள் பிரபோத தற்கொலை செய்து கொண்டார்.

முதல் போராளியான புத்தி பிரபோத கருணாரத்னவுக்கு நிம்மதி" – என்று தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது குண்டர் கும்பலை ஏவி தாக்கிய விவகாரத்தில் சனத் நிரந்த கைது செய்யப்பட்டு வழக்கை எதிர்கொண்டு வருகின்றார். (02)

## நாணய நிதிய ஒப்பந்தம்; ஏப்ரல் 26, 27 விவாதம்

### அனைவரும் ஆதரிப்பார்கள் என்கிறார் சியம்பலாபிட்டிய



சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாடு தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஏப்ரல் 26, 27 விவாதம் நடத்தப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடு தொடர்பில் நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் ஏப்ரல் 26, 27 நாடாளுமன்றத்தின் உடன்பாட்டைப் பெற்றுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் ஒன்றுபட்டு நாட்டின் எதிர்காலத்திற்காக இதனை ஆதரவளிப்பார்கள் என்று கருதுகின்றேன் – என்றார்.

## கப்பலில் தப்ப முயன்ற நால்வருக்கும் பிணை

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த பனாமா நாட்டு கப்பலுக்குள் பிரவேசித்து, சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேற முற்பட்ட குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டி ருந்த நால்வருக்கும் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவர்கள் காலி பிரதம நீதவான் இசுரு நெத்திகுமார முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதன்போது, ஒவ்வொருவரையும் தலா ஐந்து இலட்சம் ரூபாவுக்கு நிகரான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதியளித்த நீதிவான், நாட்டிலிருந்து சட்டவிரோதமாக வெளியேறும் நடவடிக்கைக்கு ஒத்தாசை வழங்கிய நபர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு மீண்டும் ஜூலை 20ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

வடக்கில் வசிக்கும் நான்கு இளைஞர்களே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி, கொழும்பு துறைமு-கத்தில் நங்கூரமிட்டிருந்த பனாமா நாட்டுக்கு சொந்தமான சரக்குக் கப்பலுக்குள் சட்டவிரோதமாக வெளிநாடு செல்லும் நோக்கில் இரகசியமாக நான்கு இளைஞர்களும் பிரவேசித்துள்ளனர்.

இந்தநிலையில், கடந்த மார்ச் 26 ஆம் திகதியன்று, கப்பல் ஊழியர்கள் அமெரிக்காவிற்குச் சென்று கொண்டிருந்தபோது சுயஸ் கால்வாய் அருகே ஊழியர்கள் அல்லாத குழுவொன்று கப்பலுக்குள் இருப்பதை அடையாளம் கண்டனர்.

கப்பல்களை கையாளும் கெக்ஷிப்பிங் நிறுவனத்துக்கு அறிவித்த பின்னர் அவர்கள் இலங்கை செல்லும் மற்றுமொரு கப்பலிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பின்னர், கடந்த 10ஆம் திகதி, குடிவரவு அதிகாரிகள் இழுவைப் படகில் குறித்த கப்பலுக்குச் சென்று, குறித்த இளைஞர்களை அழைத்து வந்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (02)

## 60,000 போதை மாத்திரைகள் கட்டுநாயக்கவில் மாட்டின

### இந்தியாவிலிருந்து திருப்பிய நபர் கைது

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பெரும் எண்ணிக்கையான போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் உப பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்த நபர் கைது செய்-யப்பட்டுள்ளார்.

விமான நிலைய வருகை முனையத்தில் கைது செய்யப்பட்ட நபரின் பயணப் பொதிகளைச் சோதனை செய்ததில், 34 கிலோ கிராம் மொத்த எடையுள்ள 60 ஆயிரத்து 460 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த மாத்திரைகள் பொதுவாக நரம்பு தொடர்பான சிகிச்சைகளுக்குப் பயன்படுகின்றன. இருப்பினும், இது ஹெராயினுக்கு மாற்றாக போதைக்கு அடிமையானவர்கள் மத்தியில் பிரபலமாகியுள்ளது.

தலை முடிக்கான நிறப்பூச்சு பைக்கற்றுகளுக்குள் இந்தக் கடத்தல் பொருட்கள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகப் பொலி-ஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் திகன, ரஜவலை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்திய பின்னர், அவரை மேலதிக விசாரணைகளுக்காக ஏழு நாட்கள் தடுப்புக் காவலில் வைக்க பொலிஸார் அனுமதி பெற்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (02)

### பயங்கரவாத விசாரணைப் பிரிவிற்கு

## முன்னாள் சட்ட மா அதிபரிற்குப் பதிலாக அவரது சட்டத்தரணி பதில் வழங்கினார்

முன்னாள் சட்ட மா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா இன்று காலை பயங்கரவாத விசாரணைப் பிரிவின் அழைப்பை ஏற்று விசாரணைக்குச் சமூகமளிக்கவில்லை. பதிலாக அவரது பிரதிநிதியொருவர் அனுப்பப்பட்டிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து அவரது பதவிக் காலத்தின் இறுதியில் அவர் வெளியிட்ட கருத்து தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா, பயங்கரவாத விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

தப்புல டி லிவேராவிற்கு பதிலாக விடயங்களை முன்வைப்பதற்காக சட்டத்தரணி திமித்ர அபேசேகர பயங்கரவாத விசாரணைப் பிரிவிற்கு இன்று வருகை தந்திருந்தார்.

அவர் அங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வாக்குமூலம் அளிப்பதற்கு வருகை தருமாறு குறுந் தகவல் அறிவிப்பொன்று முன்னாள் சட்டமா அதிபர் லிவேராவுக்கு விடுக்கப்பட்டிருந்தது.

அவர் சட்ட மா அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் தெரிவித்த கருத்து தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்துவதற்காகவே அழைப்பு விடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தவகையில், முன்னாள் சட்ட மா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா சார்பில் நான் முன்னிலையாகி ஏழு பக்க ஆட்சேபனையொன்றை அளித்துள்ளேன்.

தற்போதைய சட்டமா அதிபரை அணுகி அவரிடத்தில் தெளிவுபடுத்தலொன்றைப் பெறுவதே குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்குச் சிறந்ததாகும்.

முன்னாள் சட்டமா அதிபர் உயிர்த்த ஞாயிறு விவகாரம் தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை 2

## தேர்தலை ஒத்திவைத்து வர்த்தமானி வெளியீடு

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் 25 ஆம் திகதி திட்டமிட்டப்படி நடத்த முடியாது எனக் குறிப்பிட்டு சகல தெரிவத்தாட்சி அதிகாரிகளினாலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

திறைசேரியினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் அல்லது உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் வழக்கின் தீர்ப்பு வெளிவந்ததை அடுத்து தேர்தல் இடம்பெறும் புதிய தினத்தை அறிவிப்பதாக அந்த வர்த்தமானியில் 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அன்னை பூபதிக்கு நல்லூரில் அஞ்சலி







தமிழர்களுக்காக அஹிம்சை வழியில் போராடி தன்னுயிரினை ஈகம் செய்த அன்னை பூபதி அம்மாவின் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றைய தினம்(புதன்கிழமை) நல்லூரடியில் உள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில் நடைபெற்றது.

அவர் உயிரிழந்த நேரமான 8.45 மணி முதல் தியாகத்தாயின் உருவப்படத்திற்கு பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அதனைத் தொடர்ந்து இறுதி நினைவேந்தல் நிகழ்வு மாலை 5 மணிக்கு நடைபெற்றது.

இவ் நினைவேந்தலில் ஈகைச்சுடரை தியாகத்தாய் அன்னை பூபதியின் பேத்தி ஏற்றிவைத்தார்.

# பல்கலைக்கழகத்திலும் அஞ்சலி









இந்திய அமைதிப் படைக்கு எதிராக அறவழியில் உணவு தவிர்ப்புப் போராட்டநடத்தி உயிர் ஈந்த அன்னை பூபதியின் 35ஆவது நினைவுதினம் யாழ். பல்கலையின் பிரதான தூபி வளாகத்தில் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் அழகராசா விஜயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

அன்னை பூபதியயின் உருவப் படத்திற்கு ஈகச் சுடரேற்றப்பட்டு ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்து. மலரஞ்சலியும் செலுத்தப்பட்டதோடு அன்னைபூபதியம்மாவின் நினவுப்பேருரையும் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள்,ஊழியர்கள் என பலரும் நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# கிளிநொச்சியிலும் இன்று அன்னை பூபதிக்கு அஞ்சலி

## பௌத்த ஆக்கிரமிப்பைக் கண்டித்து போராட்டமும் நடத்தப்பட்டது





அன்னை பூபதி நினைவு நாள் நிகழ்வும் கவனவீர்ப்பு உணவுதவிர்ப்புப் போராட்டமும் கிளிநொச்சியில் இன்று காலை 9.30 மணி முதல் இடம்பெற்றது. கிளிநொச்சி சேவைச்சந்தை முன்பாக இதற்கெனத் தனியாக அமைக்கப்பட்ட இடத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

சமயத்தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்தோடு பூபதியின் வழியில், நாட்டில் இடம்பெற்றுவரும் தொல் பொருள் இடங்கள் ஆக்கிரமிக்கப்படுவதைக் கண்டித்து அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டமும் நடத்தப்பட்டது. (05)

# வரணி மதிஒளி மைதானம் திறப்பு





தென்மராட்சிப் பிரதேசத் திற்குட்பட்ட வரணி மதிஒளி விளையாட்டுக்கழக மைதானத் திறப்பு விழாவும்-விளையாட்டு நிகழ்வுகளும் செவ்வாய்க் கிழமைபிற்பகல்மைதானத்தில் இடம் பெற்றது.

விளையாட்டுக்கழகத்தலைவர் இ.கோகுலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து சிறப்பித்தார்.

மேலும் கரம்பைக்குறிச்சி கிராம சேவகர் திருமதி தீபா, கிராமத்தின் சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி மஞ்சுளா, வரணி மத்திய கல்லூரி அதிபர் ஆ.தங்கவேலு,கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலை அதிபர் நா.கண்ணதாசன்,மதிஒளி சனசமூக நிலையத் தலைவர் வ.பிறேமதாசன், யோகா துணைப் பேராசிரியர் சமூக ஜோதி ம.செல் வராசா, கரம்பைக்குறிச்சி மேற்கு கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் சுதாகர் மற்றும் வேல்ட் வின் லங்கா உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் 200 மீற்றர், 800 மீற்றர் ஓட்ட நிகழ்வுகள்,அஞ்சல் ஓட்டம்,பலூன் ஊதி உடைத்தல் போட்டி, இசையும் அசைவும் உள்ளிட்ட விளையாட்டு நிகழ்வுகளுடன் பரிசளிப்பு மற்றும்கௌரவிப்புநிகழ்வுகளும் இடம்பெற்றன.

# லொறி மோதி மாணவன் சாவு

அங்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கட்டுபொடயிலிருந்து மூனமல்தெனிய நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் சென்று கொண்டிருந்த பாடசாலை மாணவன் ஒருவர், பஸ்ஸிலிருந்து இறங்கி வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் சிறிய ரக லொறியில் மோதி விபத்துக்குள்ளானார்.



விபத்தில் படுகாயமடைந்த பாடசாலை மாணவன் குளியாபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

தரம் 6 இல் கல்வி கற்கும் 11 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஹெட்டிபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# 60 வகையான மருந்துகளை தனியாரிடம் வாங்க முடிவு

## சுகாதார அமைச்சு செயலர் தெரிவிப்பு

தட்டுப்பாடு நிலவும் 60 வகையான மருந்துகளை தனியாரிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்

ஒரு மாதத்திற்கு முன்னதாக நாட்டில் 170 மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவியதாக வைத்தியர் சமன் ரத்நாயக்க கூறினார். அந்த மருந்து பற்றாக்குறை படிப்படியாகக் குறைவடைந்து வருவதாகவும், தற்போது தட்டுப்பாட்டில் உள்ள மருந்துகளின் எண்ணிக்கையை உடன் கூற முடியாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 150 மருந்துகள் போதுமான அளவில் கையிருப்பில் இல்லாத நிலைமை காணப்படுவதாகவும், அவற்றைப் பெறுவதற்கு ஆட்சியாளர்கள் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்காதிருப்பதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் வைத்தியர் சமல் விஜேசிங்க திங்கட்கிழமைதான் தெரிவித்திருந்தார்.

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ளது. அண்மையில் கூடிய தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி சபைத் தேர்தலை திகதி அறிவிப்பு இன்றி பிற்போட்டது.

இதனையடுத்து, மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளினால் இந்த வர்த் தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (02)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிரணிக்கு வந்துள்ள ஒரு முன்னாள் அமைச்சர் ஒருவருக்குச் சொந்தமான இணையத்தளத்திலேயே முதலில் இந்தச் செய்தி வந்தது.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சியாகவே தற்போது தமிழ் முற்போக்குக் கூட்டணி இருக்கின்றது.

தேசிய அல்லது எந்தவொரு அரசாங்கத்திலும் அங்கம் வகிப்பது தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசியல் குழு கூடிப் பேசவும் இல்லை. எந்தவித முடிவும் எடுக்கவும் இல்லை. - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (02)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றுஊடங்களில்செய்திவெளியிடப்பட்டுள்ளது.

அவர் சட்டமா அதிபாராகக் கடமையாற்றி காலத்தில் உயிர்த்த ஞாயிறு சம்பவம் தொடர்பில் 130பக்க ஆலோசனைக் கடிதமொன்றை பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா இல்லையா என்பது தொடர்பில் உரிய அதிகாரிகளிடமும், தற்போதைய சட்டமா அதிபரிடமும் வாக்கு மூலம் பெறுவதே முறையான நடவடிக்கையாகும்.

அதேநேரம், தற்போதைய சட்டமா அதிபர் வழக்கோடு தொடர்புடையவர்கள் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்துள்ள நிலையில் முன்னாள் சட்டமா அதிபரிடம் வாக்குமூலம் பெற வேண்டிய தேவையில்லை - என்றார்.

# சங்குப்பிட்டி கடலில் இன்று இறால் பிடித்த 6 பேர் கைது

## சட்டவிரோதமான முறையில் தொழில் செய்ததால் நடவடிக்கை





கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, சங்குப்பிட்டி கடலில் சட்டவிரோதமான முறையில் இறால் பிடித்த 6 மீனவர்களை கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் இன்று கைது செய்தனர்.

மீனவர்கள் பயன்படுத்திய வலைகளும் கைப்பற்றப்பட்டன. அனுமதிப்பத்திரம் இன்றிய நிலையில் இவர்கள் தொழிலில் ஈடுபட்டமை மற்றும் மடியுடன் கூடிய இழுவை வலையைப்பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

உள்நாட்டு நீர் நிலைகளில் 85 மி.மீ அளவைவிடச் சிறியதான வலையைப் பயன்படுத்திய குற்றச்சாட்டும் போடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட ஆறு மீனவர்களையும் கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் ஜெகநாதன் சுபராஜினிடம் முற்படுத்தியபோது மே 2 வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார் என்று மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர். க.மேகநகுமார் தெரிவித்தார். (05)

# யாழ். மாநகர சபைக்கு எதிராக தனிநபர் பட்டினிப் போராட்டம்

## அலுவலக முன்றலில் இன்று நடத்தினார்

யாழ்ப்பாணம்மாநகரசபைக்குமுன்னால் தனிநபர் ஒருவர் இன்று காலை முதல் ஒரு நாள் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தினார்.

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட பருத்தித்துறை வீதியில் வசிக்கும் அவரது வீட்டிற்கு அருகில் அனுமதி பெறப்படாத கட்டடம் ஒன்றும் உள்ளதாகவும் அந்தக் கட்டடத்தின் கழிவுநீர் தன்னுடைய வீட்டிற்குள் வருவதாகவும். குற்றஞ்சாட்டுகின்றார் அந்த நபர்

இது குறித்து யாழ். மாநகரசபையிடம் பல தடவைகள் முறையிட்டும் எதுவித நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அதிகாரிகள் பக்கச்சார்பாக நடக்கிறார்கள் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். அதிகாரிகளின் இந்தப் போக்கைக் கண்டித்தும் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் தான் இந்த ஒருநாள் அடையாள உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபுகின்றார் என்று அவர் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை அதிகாரிகள் அவருடன் கலந்துரையாடி அவரைச் சமாதானப்படுத்த முயன்றனர். அதற்கு மசியாத அவர், தொடர்ந்தும் மாலை வரையில் தனது அடையாளப் போராட்டத்தைத் தொடர்ந்தார்.

இதன் பின்னரும் மாநகர சபையினர் நடவடிக்கை எடுக்கவில்லையாயின் தொடர்ச்சியான போராட்டத்தில் தான் ஈடுபடுவார் ஏன்றும் அவர் தெரிவித்தார்.



# யாழ். நகரில் நேற்றிரவு பெற்றோல் குண்டுவீச்சு





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள வாகன திருத்தகம் ஒன்றின்மீது நேற்றிரவு அடையாளம் தெரியாதநபர்கள் பெற்றோல் குண்டு வீசியுள்ளனர்.

வீசப்பட்ட பெற்றோல் குண்டு அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மீது விழுந்து வெடித்தது. இதில் காருக்குச் சிறு சேதங்கள் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிகவிசாரணைகளைதொடங்கியுள்ளனர். தொழில்போட்டிகாரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# மருத்துவக் கழிவு எரியூட்டி; நாவற்குழியிலும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகளை உயர் வெப்பநிலையில் எரியூட்டி அழிப்பதற்கான எரியூட்டியைநாவற்குழியில் அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்புத்தெரிவிக்கின்றனர்.

மருத்துவக்கழிவுகளை எரிப்பதற்கு இருந்த எரியூட்டிகளின் போதாமை காரணமாக ஆறுகால்மடம், கோம்மைபயன் மணல் சுடுகாட்டில்புதியஎரியூட்டியை அமைக்கும் யோசனையை யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரிகள் யோசனை முன்வைத்திருந்தனர். அதற்கு அந்தப் பகுதி மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி மேற்கு ஜே/294 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சிவபூமி அறக்கட்டளைக்கு சொந்தமான காணியில் அதனை அமைக்க முடியும் என்று சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு. திருமுருகன் அறிவித்திருந்தார்.

அப்படிஅங்குஎரியூட்டியை அமைப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டாம் என நாவற்குழி மேற்கு மக்கள் மாவட்ச்செயலரிடம்கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பாக திங்கட்கிழமை மாவட்டச் செயலலருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாவற்குழி மேற்கில் அமைந்துள்ள சிவபூமி காணியில் எரியூட்டி அமைப்பதற்கான அனுமதியை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம்யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் கோரியுள்ளது.

எரியூட்டி அமைக்கப்படவுள்ளகாணிகுடியிருப்புக்களை அண்மித்திருக்கும் காணி, காணியின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள் வயல் நிலங்களாகவும்,

தெற்கு பகுதி மீனவர்கள் பயன்படுத்தும் பரவைக்கடலாகவும் காணப்படுகிறது.

இந்தச் சூழலில் ஆலயங்கள்,குளங்கள் மற்றும் குடிநீர் கிணறுகள் காணப்படுகின்றன.எனவே எரிகூடம் அமைத்து பயன்படுத்தும்போது நிலத்தடி நீர் மாசுபடும். அதேவேளையில் போதிய கண்காணிப்பு இல்லாத பட்சத்தில் வைத்தியசாலைக் கழிவுகள் குடியிருப்புக்களுக்குள் வரக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன.

மேலும் கழிவுகளை குடியிருப்புக்கள்,ஆலயங்களை தாண்டியேமேற்படிகாணிக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

இதனால்பொதுமக்கள் மனஉளைச்சலுக்குஆளாக நேரிடும்.

அத்துடன் காற்றுப் பலமாக வீசும்போதுஎரிகூடத்தில் இருந்து வெளிவரும் மாசுக்காற்று காரணமாக சுற்றுச்சூழல் பாதிப்படைவதோடு–நோய் நொடிகள் ஏற்படக்கூடும்

மேற்படி காணியை பார்வையிடச் சென்ற நகர அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் போதனா வைத்தியசாலை அதிகாரிகள் காணிக்கான பாதை வழியாகச் செல்லாமல் மாற்றுப் பாதை ஊடாகவே சென்று காணியை பார்வையிட்டுள்ளனர்.

,கட்டட அனுமதிக்கு சாவகச்சேரி பிரதேசசபையிடம் அனுமதி கோராமல் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் அனுமதியைக் கோரியுள்ளனர்.,

அத்துடன் காணி உரிமையாளரான சிவபூமி அறக்கட்டளை மற்றும் எரிகூடம் அமைக்க முற்படும் போதனா வைத்தியசாலை ஆகியன இந்த விடயம் தொடர்பாககிராமத்தில்உள்ள பொதுஅமைப்புக்களுக்கோ மற்றும் பிரதேச செயலகத்திற்கோ எந்தவிதமான தெளிவுபடுத்தல்களையுமே வழங்கவில்லை.

இவைஅனைத்தையும் ஒப்பிட்டு பார்க்கும் போது எரியூட்டி அமைப்பதால் சுற்றுச்சூழலுக்கும்–பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பது தெளிவாக தெரிகின்றது.

எரிகூடவ; யாழ். மாவட்டத்திற்குளு; தேவை என்பதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதனை மனிதக் குடியிருப்புக்கள் அற்ற பிரதேசத்தில் அமைக்க ஆவண செய்யுமாறு கேட்கின்றோம்.

நாவற்குழி மேற்கு மக்கள் இயற்கையோடு ஒன்றித்து வாழ்கின்றனர். எமது மூதாதையர்கள் எந்தவொரு நோய்நொடியுமின்றி இதுவரை மகிழ்வாக வாழ்ந்துள்ளனர்.

எமது குடியிருப்பு பகுதியில் எரியூட்டியை அமைத்து எமது வாழ்வி–யலைக் குழப்ப வேண்டாம் –என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடிதப் பிரதிகளையாழ்போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும்வடக்குமாகாணசுகாதாரப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. கிராம மக்கள் பலரும் அதில் கையொப்பமிட்டுள்ளனர்.

# கட்சி மட்டத்தில் எவ்வித பேச்சுகளும் தேசிய ஆட்சி குறித்து நடக்கவில்லை

## காமினி லொக்குகே தெரிவிப்பு



தேசிய அரசாங்கம் தொடர்பில் கட்சி மட்டத்தில் எவ்வித பேச்சுகளும் இடம்பெறவில்லை. எந்த அரசாங்கம் அமைத்தாலும் பொதுஜன பெரமுனவுக்கு முன்னுரிமைவழங்கவேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம் ஏனெனில் நாங்களே ஜனாதிபதியைத் தெரிவு செய்தோம் என நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற பேசின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காகவேரணில்விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம். குறுகிய காலத்துக்குள் நாடு வழமை நிலைக்குத்திரும்பியுள்ளது.

நெருக்கடியான நேரத்தில் சவால்களை பொறுப்பேற்காத தரப்பினர் தற்போது அரசாங்கத்தை பொறுப்பேற்க தயார் எனக் குறிப்பிடுகிறார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை முழுமையாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அரசாங்கம் ஸ்திரமான தன்மையில் காணப்பட வேண்டும். சகல தரப்பினரின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதன் அவசியம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 25 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு தெளிவுபடுத்துவார்.

பொருளாதாரநெருக்கடி தீவிரமடைந்தபோது அரசாங்கத்தில் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்த போது எவரும் அரசாங்கத்துடன் ஒன்றிணையவில்லை. நாடு வழமைக்கு திரும்பிய பின்னர் தற்போது அரசாங்கத்துடன் இணைய எதிர்தரப்பினர் அவதானம் செலுத்தியுள்ளார்கள். தேசிய அரசாங்கம் தொடர்பில் கட்சி மட்டத்தில் எவ்வித பேச்சுகளும்இடம்பெறவில்லை. எந்த அரசாங்கம் அமைத்தாலும் பொதுஜன பெரமுனவுக்கு முன்னுரிமைவழங்கவேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம். –என்றார்.



# அரசுக்கு எதிரான தொழில் உரிமைப் போராட்டம் அரசியல் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும்

## அடித்துக் கூறுகின்றார் வாசுதேவ

அரசாங்கத்தை வீழ்த்தும் வகையிலான போராட்டத்தை மே முதலாம் திகதியில் இருந்து முன்னெடுப்போம். தொழில் உரிமைக்கான போராட்டம் அரசியல் கட்டமைப்பில்பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பொரளை பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்குறிப்பிட்டவைவருமாறு–

தொழிலாளர் உரிமைகளை முடக்கும் வகையில் சட்டங்களை இயற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார். உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் உழைக்கும் வர்க்கத்தினருக்கு எதிரான ஏற்பாடுகளை கொண்டுள்ளது.

உத்தேசபயங்கரவாதஎதிர்ப்புசட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் தொழிலாளர்கள் தங்களின் தொழில் உரிமைக்காகப் போராட முடியாது.

தொழில் உரிமைகளை அரசாங்கம் இரத்து செய்தாலும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபடவும் முடியாது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற ஒருபோதும் இடமளிக்க முடியாது. நாட்டு மக்களை ஒன்றுத்திரட்டி மாபெரும் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் ஜனநாயக போராட்டம் கூட பயங்கரவாதமாக அடையாளப்படுத்தப்படும்.

அரசாங்கத்தின் வரி கொள்கையால் தொழிற்துறையினர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசாங்கத்தை வீழ்த்தும் வகையிலான போராட்டத்தை எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியில் இருந்து முன்னெடுப்போம்.

தொழில் உரிமைக்கான போராட்டம் அரசியல் கட்டமைப்பில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிந்து கொள்ள வேண்டும். – என்றார்.

# உத்தேச நலன்புரி நன்மைகள் திட்டத்தை ஜூலை முதல் நடைமுறைப்படுத்த அனுமதி

## அமைச்சரவை வழங்கியது

நலன்புரி நன்மைகளைச் செலுத்துவதற்கான உத்தேசத் திட்டத்தை தயாரித்து நடைமு–றைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நலன்புரி நன்மைகளைச் செலுத்துதல் தொடர்பாக குறித்த காலப்பகுதி உத்தேச திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை, நடைமுறைப்படுத்தலை ஆரம்பிக்கும் தினம், உத்தேச திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக செலவாகும் தொகை போன்ற விடயங்களைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டு அதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப்பெற்றுக்கொண்டபின்னர், வர்த்தமானி பத்தி ரத்தில் வெளியிட்டு குறித்த நலன்புரிக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு பாராளுமன்றஅங்கீகாரத்தைப்பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதற்கமைய, நடைமுறைப்படுத்த வேண்டிய உத்தேச திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான வழிகாட்டலைப் பெற்றுக்கொள்வதற்காக விடயம்சார் நிபுணர்களுடன் கூடிய தொழிநுட்பக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டு, வறுமை இடைவெளியின் அடிப்படையில், நிலைமாற்றுநிலை, இடர் நேர்வுகளுக்குள்ளாகிய, வறுமை மற்றும் தீவிர வறுமைக்குட்பட்ட சமூகக் குழுக்களுக்கு நலன்புரி நன்மைகள் உத்தேச திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், தற்போது நலன்புரி நன்மைகளைப் பெற்று வருகின்ற இயலாமையுடன் கூடிய நபர்கள், சிறுநீரக நோயாளர்கள் மற்றும் வயோதிபர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கான வேறானதொரு நலன்புரி நன்மைகள் உத்தேச திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, உத்தேச நலன்புரிநன்மைகள் திட்டத்தை ஜூலை1முதல்நடைமுறைப்படுத்து–வதற்கு எதிர்பார்க்கின்றதுடன், அதற்காக செலவிடப்படும் மொத்தத் தொகை ஆண்டொன்றுக்கு 206 மில்லியன் ரூபா எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. அதற்கமைய, உத்தேச நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு செலுத்தல் முறைமைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## காரைக்கால் – காங்கேசன்துறை

# படகு சேவையை ஆரம்பிப்பதற்கான இந்தியாவின் அனுமதியில் தாமதம்



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் படகு சேவையை ஆரம்பிப்பதற்கு தேவையான அனுமதிகளை வழங்கியுள்ளதாகதுறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் பிற தொடர்புடைய அமைப்புகளுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் படகு சேவைக்கு நான்கு நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன என்றும் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்குத் தேவையான அனுமதி இதுவரை இந்திய அதிகாரிகளால் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் காரைக்கால்துறைமுகத்துக்கும்இடையிலான படகு சேவையை தொடங்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பல சுற்று பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன என துறைமுகங்கள், கப்பல்த்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஈழத் தமிழர் மனங்களை வென்ற தாய்

காந்தி மகாத்மாவாகக் கொண்டாடப்படுகின்றார். அறவழிப் போராட்டத்தை, அகிம்சை வழிப் போராட்டத்தை உலகத்திற்குக் கற்றுத் தந்தவர் என்று போற்றப்படுகின்றார். அவருக்கு உலகம் முழுவதும் சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. உலகத் தலைவர்களில் ஒருவராக, ஏழைய மக்களின் பிரதிநிதியாக அவர் உலகம் முழுவதும் மதிக்கப்படுகின்றார். அதற்குக் காரணம் அவர் வன்முறையை, இம்சையைத் தவிர்த்து, தன்னை வருத்தி எதிரியைத் திணறடிக்கும் அகிம்சையை தனது போராட்ட வழிமுறையாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டதுதான்.

அதே காந்தியை பெற்றெடுத்த பாரதத்திற்கு எதிராகத்தான், மிக அற்பக் கோரிக்கைகளை முன்வைத்து ஒரு மாத காலம் உணவை ஒறுத்து தன் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்ட ஒருத்தியின் நினைவு நாள் இன்று. காந்தி தேசம் அவள் உயிர் மெல்ல மெல்லக் காற்றில் கரைவதை வேடிக்கை பார்த்தது. அவள் முன்வைத்த இரு கோரிக்கைகளும் மிக மிக அற்பமானவை.

உடனடியாகப் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும், இந்திய ஆட்சியாளர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு பேச வேண்டும் என்பனதான் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள். அவள் உயிரைக் காக்கும் போலி வேசமாகத்தானும் இந்த இரு கோரிக்கைகளையும் நிறைவேற்றியிருக்க முடியும். ஆனால், இந்தியாவின் திமிர் அதை மறுத்து அவளைக் கொன்றது. அவளது நினைவு நாளில் அவர்கள் எப்படியிறந்தால் என்பதை மட்டுமல்ல ஏன் இறந்தாள் என்பதையும் இளைய தலைமுறைகள் தெரிந்துகொள்வது அவசியம்.

கணபதிப்பிள்ளை பூபதி 10 பிள்ளைகளின் தாய். அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணியின் தீவிர செயற்பாட்டாளர். அது இந்தியப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் தொடங்கியிருந்த சமயம். போராட்ட வலுவுள்ள ஆண்கள் அனைவரையும், அமைதிப் படை என்ற பெயரில் வந்த இந்தியத் தரைப் படையினர் தமது இலக்குகளாகக் கொண்டு செயற்பட்ட அந்தக் காலத்தில் பெண்கள்தான் எந்தவொரு காரியத்தையும், குறிப்பாகத் தமது ஆண்களையும் தேசத்தையும் காப்பாற்றக் குரல் எழுப்பக்கூடியவர்களாக இருந்தார்கள். அதற்கான வெளி மட்டுமே இருந்தது.

அதனடிப்படையில் போரை நிறுத்த வலியுறுத்தியும் பேச்சை தொடங்க வலியுறுத்தியும் அடையாளப் போராட்டங்களை நடத்த மட்டு. அம்பாறை அன்னையர் முன்னணி முடிவெடுத்தது. அந்தப் போராட்டங்களை இந்தியா கவனத்தில்கூட எடுக்கவில்லை. நீண்ட நாள்களின் பின்னர் திருகோணமலையில் ஒரு பேச்சு நடந்தது. ஆனால் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. போராட்டம் தொடர்ந்தது. 1988 மாசி 10 கொழும்பில் இந்திய தூதரக அதிகாரிகளுக்கும் அன்னையர் முன்னணி நிர்வாகத்தினருக்கும் இடையில் நடந்த பேச்சும் தோல்வி அடைந்தது.

இதையடுத்து தொடர் பட்டினிப் போராட்டம் என்கிற முடிவுக்கு வந்தது அன்னையர் முன்னணி. பலர் அந்தப் போராட்டத்திற்கு முன்வந்தனர். அவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவானார். அவர் அன்னை பூபதி அல்லர். அன்னம்மா டேவிட்தான் முதலில் பட்டினிப் போராட்டத்தை அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் கோயிலில் தொடங்கினார். இந்தியப் படை போராட்டத்தைக் குழப்பத் தலைகீழாக நின்றது. கடைசியில் அன்னம்மா போராட்ட மேடையிலிருந்து கடத்தப்பட்டார். அதன் பின்னர்தான் அன்னை பூபதி அந்தப் போராட்டத்தை பங்குனி 19 தொடங்கினார்.

தொடங்கும்போதே தான் சுயநினைவிழந்தாலும் தன்னை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று காப்பாற்ற கணவனோ பிள்ளைகளோ முயற்சிக்கக்கூடாது என்று எழுதி வைத்துவிட்டார். நீர் மட்டுமே அருந்தியபடி பட்டினி கிடந்தார். இந்தியா இறங்கிவரத் தயாராக இருக்கவில்லை. ஒரு மாதம் கழித்து அவர் இறுதித் துளி உயிரும் உடலிலிருந்து வடிந்தது.

இந்தியா தனது சுதந்திரப் போராட்டத்தில் வென்றதால் காந்தி உலகம் போற்றும் தலைவரானார். ஈழத் தமிழர்களுக்கு அது நடக்காததால் அன்னை பூபதியை ஒரு நாடு போற்றும் பாக்கியம்கூடக் கிட்டவில்லை. இராமர் பாலம் கட்ட அணில் உதவியது என்கிற கதையைப் போல வல்லரசின் அதிகார வெறிக்கு முன்னால் ஒரு தனி மனுசியாகப் போராடிப் பார்த்த அன்னை பூபதி அந்தப் போராட்டத்தை வெல்ல முடியாதவராகிப் போனாலும் ஈழத் தமிழர்களின் மனங்களை வென்ற தாயாக நிலைத்திருக்கின்றார்.

இப்படிப்பட்ட பல தன்னலமற்ற தியாகங்களின் வழி கட்டியெழுப்பப்பட்ட தமிழ்த் தேசியம், தமிழ்த் தேசம், குறைந்தபட்சம் தனது சுயநிர்ணயத்தையாவது மீட்டெடுக்க தமிழர்கள் அனைவரும் தம்மை அர்ப்பணிப்பதே அவருக்கும் அந்த தன்னலமற்ற ஈகங்களுக்கும் உரிய மரியாதையாகும்.

# விசேட கடன் ஒருங்கிணைப்புக் குழுவில் இந்தியா, பிரான்ஸ், ஜப்பான் உள்ளடக்கம்

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெகான் தகவல்



நீடிக்கப்பட்ட நிதியுதவிச் செயற்திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு எட்டப்பட்டதைத் தொடர்ந்து இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் அடங்கிய விசேட கடன் ஒருங்கிணைப்புக்குழுவை உள்ளடக்கிய பிரத்தியேக செயற்திட்டத்தின் அடிப்படையில் கடன்மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுத்துவருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள்பொருளாதார மற்றும் சமூகப்பேரவையின் 2023 ஆம் ஆண்டுக்குரிய அபிவிருத்திக்கான நிதியிடல் கூட்டம் நியூயோர்க்கில் அமைந்துள்ளஐக்கியநாடுகள்சபையின் தலைமைக் காரியாலயத்தில் ஆரம்பமானது.

நாளை (வியாழக்கிழமை) வரை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தொடரின் முதலாம்நாள் அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாம் கடந்த 2015 ஆம் ஆண்டில் இணங்கிய அபிவிருத்தி இலக்குகளின் அடைவு மந்தகரமான நிலையில் காணப்படுவதுடன், அதனை எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் அடைந்துகொள்வதில் பல்வேறு நெருக்கடிகள் நிலவும் சூழ்நிலையிலேயே இப்போது நாம் சந்தித்திருக்கின்றோம்.

இந்த அபிவிருத்திச் செயற்திட்டம் கொவிட் - 19 பெருந்தொற்றுக்கு முன்னரும் கூட வேறுபல காரணங்களால் மந்தகரமான நிலையிலேயே காணப்பட்டது.

இது கொவிட் - 19 பெருந்தொற்று தொடக்கம் உக்ரேன் மீதான படையெடுப்பு மற்றும் காலநிலை மாற்றம் உள்ளிட்ட காரணிகளால் மேலும் பாதிப்படைந்தது.

எனவே, ஏற்கனவே அடைந்துகொள்வதற்கு இணக்கப்பட்ட அபிவிருத்தி இலக்குகள் இன்னமும் அடையப்படாததன் விளைவாக தற்போது பூகோளமயமாக்கச்செயன்முறை மிகுந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. போதுமானதும், நிலையானதுமான நிதியிடல் இல்லை என்பதே 2030 ஆம் ஆண்டுக்குரிய அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதில் பெரும்பாலான நாடுகள் முகங்கொடுத்திருக்கும் முக்கிய சவாலாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் உலகளாவிய ரீதியில் இதனை உரியவாறு கையாள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான 'அரசியல் தேவைப்பாடு'உள்ளதா?, குறிப்பாக அபிவிருத்திசார் உதவிகள், கடன்மறுசீரமைப்பு மற்றும் கடன் ஸ்திரத்தன்மை சார் உதவிகளை உள்ளடங்கலாக ஏற்கனவே இணங்கிக்கொள்ளப்பட்ட செயன்முறைகளைப் பூர்த்திசெய்யக்கூடியவகையில் சர்வதேச நிதியியல் கட்டமைப்பை எவ்வாறு மறுசீரமைப்பது? என்பது குறித்து விசேட அவதானம் செலுத்தவேண்டியது இன்றியமையாததாகும்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றுடனான சந்திப்புக்களில் பங்கேற்றதன் பின்னரே நான் இங்கு வருகைதந்திருக்கின்றேன்.

தற்போது பூகோள ரீதியில் நாம் முகங்கொடுத்திருக்கும் சவால்களால் இலங்கையின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கொவிட் - 19 பெருந்தொற்றின் பின்னரான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக பெரும்பாலான அபிவிருத்தியடைந்த நாடுகள் இறுக்கமான நிதி மற்றும் நாணயக்கொள்கையை நடைமுறைப்படுத்திவருகின்றன.

இருப்பினும் அபிவிருத்தியடைந்துவருகின்ற அநேக நாடுகளால் அதனைச் செய்யமுடியாது என்பதுடன் அவை அதிகரித்த கடன்களாலும், உயர்வான வட்டிவீதங்களாலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் இலங்கையும் அண்மையகாலங்களில் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது. இந்நிலையில் நீடிக்கப்பட்ட நிதியுதவிச்செயற்திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாட்டைத் தொடர்ந்து இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகியநாடுகளை உள்ளடக்கிய விசேட கடன் ஒருங்கிணைப்புக்குழுவுடன்கூடிய செயற்திட்டத்தின் அடிப்படையில் கடன்மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றோம்.

அதன்படி பொருளாதார மீட்சியை முன்னெடுத்திய கடினமான கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு எமது அரசாங்கம் தயாராக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு விவகாரம்: அரசின் பின்னணி நோக்கம் குறித்து சந்தேகம்

## தென்னிலங்கை அரசியல் கட்சிகள் கிளப்புகின்றன

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் உடனடியாகவே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபித்திருக்கவேண்டும்.

இருப்பினும்தாமதமாகவேனும் இந்த ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை வரவேற்பதாகத் தெரிவித்துள்ள தென்னிலங்கை அரசியல் கட்சிகள், இருப்பினும் இதன் பின்னணியிலுள்ள அரசாங்கத்தின் நோக்கம் தொடர்பாகச் சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளன.

மூன்று தசாப்தகாலமாக நாட்டில் இடம்பெற்ற ஆயுதமோதலின்போது பதிவான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரியவாறான விசாரணைகளை முன்னெடுத்து நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுமாறு சர்வதேச சமூகம் இலங்கையைத் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் தென்னாபிரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்டதை யொத்த உண்மைமற்றும்நல்லிணக்கஆணைக்குழுவொன்றை இலங்கையில் ஸ்தாபிப்பதற்குரியநடவடிக்கைகளை அரசாங்கம்முன்னெடுத்துவருகின்றது.

அரசாங்கத்தின் காலம் கடந்த இம் முயற்சியை வரவேற்பதாகத் தெரிவித்துள்ள தென்னிலங்கை அரசியல் கட்சிகள், இருப்பினும் இந்தநடவடிக்கையின்உண்மையான நோக்கம் குறித்தும், இதனூடாக அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் பெறுபேறு கிட்டுமா என்பது தொடர்பாகவும் தமது சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளன.

அதன்படி இதுபற்றிக் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, தாமதமாகவேனும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் இம்முயற்சியை வரவேற்பதாகத் தெரிவித்தார்.

சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தின் விளைவாகவே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்திருக்கின்றது என்ற போதிலும், இதனூடாகஎதிர்பார்க்கப்படுகின்ற பயன் கிட்டுவதை உறுதிசெய்ய வேண்டியது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்குத் தீர்வை வழங்குகின்ற உண்மையான நோக்கம் அரசாங்கத்துக்கு இருக்கின்றதா என்பதைத் தம்மால் உறுதியாகக் கூறமுடியாதெனக் குறிப்பிட்ட திஸ்ஸ அத்தநாயக்க, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டவரைவு வெளியானதன் பின்னரே ஏனைய விடயங்கள் தொடர்பில் கூறமுடியும் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு யுத் தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டதன் பின்னர் உடனடியாகவே ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், போரின் பின்னரான மறுவாழ்வுக்கான தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபித்தல் என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு முக்கிய பரிந்துரைகளை உள்ளடக்கிய அறிக்கையை கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி தாம் அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததாகவும் குறிப்பிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத், இருப்பினும் அரசாங்கம் அதனைச் செய்யவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று கடந்த 2015 ஆம் ஆண்டில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பிரதமராகக்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிய நல்லாட்சி அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் வாக்குறுதியளித்த போதிலும், அதனை நடைமுறைப்படுத்தவில்லை என்று தெரிவித்த விஜித்த ஹேரத், யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 14 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இப்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதென்பது மிகமிகத் தாமதமான நடவடிக்கையாகும் என்று குறிப்பிட்டார்.

'எனினும்தற்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவி, அதனூடாக 'கடந்தகால காயங்களை ஆற்றுவதற்குரிய' நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின் அதனை வரவேற்கின்றோம். இருப்பினும் இது அரசாங்கத்தின் 'நேர்மையான' நடவடிக்கையா என்பதில் எமக்கு சந்தேகம் உள்ளது' என்றும் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

மேலும்,இவ்விடயம்தொடர்பில் கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கூறியவை வருமாறு -

இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிக்கும் நோக்கில் அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் அலி சப்ரி ஆகியோர் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டு கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தனர். இருப்பினும் தென்னாபிரிக்காவிலும்இலங்கையிலும் இடம்பெற்றவை இருவேறு சம்பவங்களாகும். தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவர்களுக்கு எதிராக வெள்ளையர்களால் திட்டமிட்டவகையில் ஒடுக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன. இருப்பினும் இலங்கையில் பயங்கரவாதத்தை முடிவுக்குக்கொண்டுவருவதை முன்னிறுத்திய யுத்தமே இடம்பெற்றது. எனவே தென்னாபிரிக்காவில் இயங்கிய உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலக மாதிரி இலங்கைக்குப் பொருந்துமா? என்ற சந்தேகம் நிலவுகின்றது.

அதேபோன்றுகடந்தகாலங்களில் நாம் முன்னெடுத்த எந்தவொரு உள்ளகப்பொறிமுறையையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஊக்குவிக்கவோ, ஆதரவளிக்கவோ இல்லை. அதுமாத்திரமன்றி அவற்றை உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்கும் இடமளிக்கவில்லை. அதன் விளைவாகவே இலங்கை தொடர்பில் 30.1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவர்கள் எம்மைத் தண்டிக்கவேண்டும் என்றே கருதுகின்றார்கள். அவர்களின் அனுமதியின்றி நாம் யுத்தத்தை வென்று, அதனை முடிவுக்குக்கொண்டுவந்தமையே அதற்குக் காரணமாகும். எனவே தற்போது உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டாலும்கூட, அதனை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஏற்குமா என்ற கேள்வி உள்ளது என்று தெரிவித்தார்.